உ

கடவுள்துணை.

தெய்வத்தன்மைபொருந்திய

மதுரைவீரசுவாமிகதை.

திருப்போரூர்

துளசிங்கநாயகர்குமாரர்,

டி. கோபால் நாயகர்.

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1915.

மதுரைவீரன் துதிகவி.

உலகமிசைமன்னுயிர்கடன்னுயிரெனக்கருதி ஒரு
கவிகைநிழலினின்றே, ஒன்னலர் தமைச்செயித்தோங்
குசெங்கோலாங்கி யுயர்காசிநகராளுவோன், உலமகிழ்
ந்திடமதலையாவுதித்ததுமன்றி யொல்குகாட்டினில்வை
கியே, உரகனுலாதரவு பெற்றபின்புன்னட்டி லுறைமா
தகியின்மனையினில், நிலவெனத்தோன்றியவனுய் வீர
னென்றுபெயர் நிலையாகவேயடைந்த, நிருபனும்பொம்
மணன் சீமையுற்றவனீன்ற நேரிழைதனைக்கவர்ந்தும்,
நிறைபுகழ்பெறும் விஜயரங்கனெனுமன்னனது நீள்வா
யல்காவல்செய்தும், நிகரில்பலவளமெய்து மதுரையிற்
கள்ளர்தமை நெஞ்சங்கலங்கமோதி, வலனுயர்ந்தே நல்
லகுணபூஷணங்கடிருமலைநாய்க்க னிடமேவிய, மங்கை
வெள்ளம்மைதனை கண்டன்பபூண்டவளை மருவிடச்சி
றையெடுத்தும், மதிதவழுமாடச்சிகர கோபுரமதனில்
வளர்சொக்கநாதரருகில், மன்னுமீனாட்சியருளினை யடுத்
தேயும்பர் வாழ்த்திமலர்மாரிசொரியே, இலகுமவ்வா
லாயத்துள்வயங்குங்கனக வெழிற்றம்பமதி மலர்த்தே,
இப்புவிநிமித்தியார்த்தமிரு சிகுட்டிச்சாத்தனேவல் சூ
ன்யத்தினுடனே, இருமல்காமாலைகுன்னங் குட்டமிதிவ
சையுமழிவுறச்செய்வஞ்சகரையும், இவையெலாந் தீர்
த்திடும் தெய்வமே யென்முன் வந்துதித்து தருணமருள்
சரணமே,

உ

கடவுள் துணை.

மதுரைவீரசுவாமி கதை.

காப்பு.

துதியும்வீரமுஞ் சொல்லுநற்கீர்த்தியும்
அதிகவிதையு மாண்மையுந்தானுறும்
மதுரைவீரன்றன் வண்மைகதைவாழ்த்திடக்
கதிர்கொள்விநாயகன் காப்பாமரோ.

பாயிரம்.

வெண்செந்துறை.

சித்திவிநாயகர்தஞ் செய்யபதம்போற்றி
முத்தியளிக்கு முருகர்பதப்போற்றி
சொக்கர்திருவடியைத் தொழுதுமிகப்போற்றி
தக்கதிருமாலின் றாட்டாமரைபோற்றி
அங்கயற்கண்ணியம் பொற்பாதம்போற்றி
மங்கையிலக்குமி புன் மலர்ப்பதங்கள்தான்போற்றி
வல்லபைதுந்துமிதன் வண்மைப்பதம்போற்றி
வள்ளிதெய்வானை வண்ணப்பதம்போற்றி
வாணிதிருவடியை வாழ்த்திமிகப்போற்றி
செப்பரியசம்பந்தர் செம்பொற்பதம்போற்றி
மாணிக்கவாசகர்தம் மண்ணுபதம்போற்றி
அப்பர்திருவடியை யன்புடனேதான்போற்றி

சுத்தரமூர்த்தியது திங்கப்பதம்போற்றி
அத்தமிகுஞ்சிவனடியார் பதம்போற்றி
பாண்டிவளநாட்டிற் பரிதியைபோல்விளங்கும்
ஆண்டகையாமெங்களடல் வீரன்கதைசொல்லவே

நாட்டுச்சிறப்பு.

மாதமும்மாரி வழங்கிடும்வளநாடு
காதமணம்வீசுங் கர்பகஞ்சேர்நன்னாடு
கரும்பின்கணுக்கள் முத்தைக்காட்டுமகரநாடு
விரும்பியறம்வளக்கு மேலானநன்னாடு
முப்போகமும்விளைய முதிர்ச்சியுள்ளநன்னாடு
எப்புறமும்கங்கை யிலங்குந்திருநாடு
நவதானியம்விளையும் நல்லவளநாடு
தவமறையோர்மாமுனிவர் தங்கும்வளநாடு
தாமரைப்பூப்பொய்கைகளுந் தண்மலர்சேர்வாவிகளும்
ஆமையாலாவு மழகானகேணிகளும்
பொன்னுமணிகொழிக்கும் புண்ணியவாறுகளும்
மன்னுந்தளரம் வழங்கியேவோடைகளும்
சங்குதவழ்ந்துலவுந் தாழ்விலாநஞ்சைகளும்
எங்குமணிவிளையு மொழிலானபுஞ்சைகளும்
பாக்குமரச்சாலைகளும் பண்மலர்ப்பூச்சோலைகளுஞ்
தேக்குமரக்காவுகளுஞ் செங்கருபூச்சோலைகளுஞ்
சண்பகப்பூநந்தனமுந் தவனமிகுநந்தனமும்
விண்ணுலவுதோப்புகளும் வீறுகனிதோப்புகளும்
மல்லிப்பூப்பந்திகளு மருக்கொழுந்தின்பந்திகளும்

முல்லைமலர்ப்பந்திகளும் முக்கனிமாப்பந்திகளும்
வானத்தளாவிநிற்க வைத்திடுநற்போருகளுந்
தானங்கொடுக்கவைத்த தாழ்வில்களஞ்சியமும்
காமதேனுக்கு நிகர்கணக்கில்லாப்பால்பசுவுஞ்
சேமமிகுமாடுகளுந் திரளானஆடுகளும்
பதித்தோரிளைப்பாறப் பாங்கானசத்திரமும் [ம்
பொசித்தோர்க்குச்சம்போகம் பொருந்துபலசத்திரமு
ஆடையில்லார்க்காடை யளித்துவருஞ்சத்திரமும்
வாடைபனிநீர்புழுகு வழங்கிவருஞ்சத்திரமும்
வேதியர்க்குவேதம் விளங்குமறச்சாலைகளும்
சாதிக்குச்சாதி கங்குமறச்சாலைகளும்
குயிலோசைமிஞ்சுங் குறைவில்லாமாந்தோப்பு
மயிலாடிநிற்க வாய்த்தபலாதோப்பும்
அன்னங்குலாவு மாவிந்தைப்பூந்தடமும்
வன்னககிளிகள்கொஞ்சும் வளமானநல்லரசும்
இன்னவளமிகுந்த வெழிற்காசிநன்னாடு
தன்னையுரைக்கச்சேடன் றன்னாலுமகாதே

மலைவளம்.

வாரணவாசியைச்சூழ் மலைவளத்தைச்சொல்லுகிறேன்
ஆரணமாமுனிவ ரணியணியாய்த்தவமிருப்பார்
காட்டுப்பசுவுங் கடும்புலியுங்கலந்திருக்கும்
நாட்டுப்பசுவோடு நட்பாய்ப்புலிகுலாவும்
பொருந்துபைங்கிளியுமொரு பஞ்சரத்திலேதாழும் [ளும்
பொருந்தாவின்வாயலிலே போய்புகுந்துபள்ளிகொள்

பச்சோந்தியும்மயிலும் பட்சமுடன்வாழ்ந்திருக்கும்
செச்சையுங்கோனுயுஞ் செருக்குடனேன்கூடிநிற்கும்
சிங்கமும்யானையுஞ் சேர்ந்துவிளையாடிநிற்கும்
பொங்கறவுமந்திகளும் பொருந்தியறவாயிருக்கும்
இந்தவளமிகுந்த வெழிகாசிமாமலையைக்
கந்தனதுவாயாலுங் கட்டுரைத்தான்மிக்கரிதே

நகரச்சிறப்பு.

காசினிபோர்தான்புகழுங் காசியெனுமாநாகங்
தேசுமிகுந்திலகுந் தெய்வீகமாநகரம்
செம்பொன்மதில்சூழ்ந்த சிங்காரமாநகரம்
அம்பொன்னுன்மாடகூட மமர்ந்திருக்குநன்னகரம்
கோபுரமெங்குங் குறவுந்திருநகரம்
மாபுரமன்னர் மன்னர்மன்னுந்திருநகரம்
பானைக்கட்டிவாளுமுடி யரசர்வாழ்வீதிகளும்
சேனைத்தலைவர்பலர் சேர்ந்துவாழ்வீதிகளும்
அம்பொற்பணிகள்செய்யு மணிதட்டார்வீதிகளும்
வேந்தர்க்குக்கோல்கொடுக்கும் வேளாளர்வீதிகளுஞ்
சாந்துசவ்வாதுபன்னீர் தான்விற்போர்வீதிகளும்
வேதமுறைதவறு வேதியர்கள்வீதிகளும்
சாதகந்தான்குறிக்குஞ் சாஸ்திரமார்வீதிகளும்
கோலமணியளக்குங் குச்சிலியர்வீதிகளும்
வேலைப்பழிக்கும் விழிவேசியர்வீதிகளும்
கோடிகுதிரையணி குறித்திருக்குஞ்சாலைகளும்
யாடிவருங்குதிரை யணியிருக்குஞ்சாலைகளுந்

கடையுங்கடைத்தெருவுங் கனமானமாடங்களும்
கொடைதருஞ்செம்பொற் குன்றுகொட்டிவைத்தகூடங்
வீதிக்குவீதி விளங்குஞ்சிவாலயமும் [களும்
நீதிவழுவாத நெறிமன்னராலயமும்
மன்னர்க்குநன்மதிசொன் மந்திரிமார்மாளிகையுங்
கன்னன்கொடையளிக்குங் கனவான்கள்மாளிகையும்
எழுநிலைமாடங்களுந் மெழிலானகூடங்களுந்
தாழுமகழிகளுந் தங்கத்தாற்கோட்டைகளும்
போர்வீரரெப்புறமும் புடைசூழுங்காவல்களும்
தேர்வீரர்வாள்வீரர் திக்கெட்டுங்காவல்களும்
வாளுரையில்லையாத வலுவீரர்காவல்களும்
தோள்கொட்டித்தட்டிநிற்குந் துடிசூரர்காவல்களுங்
கற்பில்வழுவாத கன்னியர்கள்கூட்டங்களும்
அன்பிற்குறையாத வடியார்கள்கூட்டங்களும்
சன்மார்க்கநீங்காத சர்ச்சனர்கள்கூட்டங்களும்
துன்மார்க்கமில்லாத துரைமக்கள்கூட்டங்களும்
பந்துமுலைமாதர் பலர்பந்தடிக்குமேடைகளும்
இந்துநுதர்பெண்களாடி யினைப்பாறுமேடைகளும்
கல்விபயலுங் கனமானசங்கங்களும்
செல்வர்மகிழ்ந்து செருக்குருநற்சங்கங்களும்
மூலைக்குமூலை முத்துக்களஞ்சியமும்
சாலைக்குச்சாலை தங்கக்களஞ்சியமும்
வீடுகளெங்கும் விளங்குந்திருமணமும்
நாடுஞ்சிறுவர்கட்கு நல்லதிருமணமும்

மாணிக்கத்தாலிழைத்த மன்னர்மணிமண்டபமும்
ஆணிப்பொன்னலமைத்த வாஸ்தானமண்டபமும்
செண்டுமுலையாராடுந் தெய்வத்திருச்சபையும்
வண்டுவிழியாராடு மன்னர்திருச்சபையும்
அன்னமயிலாடு மழகானவில்லங்களும்
வன்னக்கிளிகள்கொஞ்சும் வாகானவில்லங்களும்
போர்த்தொழிற்கற்கமன்னர் தெரிந்திட்டநல்லிடமும்
எல்லாவளமு மிசைந்ததிருக்காசிநகர்
வல்லாண்மைமன்னர்பலர் வந்துபணியுநகர்
இன்னதிருநகரி லென்றும்வரனமுறையாய்த்
தன்னந்தனியே தனிச்செங்கோல்செலுத்தும்
மன்னவர்க்குமன்னன் வானிரவிதன்குலத்தோன்
கன்னல்வின்மாரனைப்போற் கட்டழகுதானுடையோன்
மன்னும்பொருமையிலே வண்பூமிக்கொப்பானோன்
சொன்னமொழிதவருச் சொல்லிலரிச்சந்திரன்றன்
கன்னன்கொடைமாறச் கனகமளித்திடுவோன்
மன்னியவன்பொரில்வள்ளி மணவாளனைப்பான்
சொல்லுமனுநீதியிலே தூயதராசனையான்
தொல்லுலகையாளும் துளசிமகராஜன்
மங்காதநீதிநெறி மாநிலத்தையோர்குடைக்கீழ்ச்
செங்கோற்செலுத்திச் செயம்பெற்றுவாழ்நாளில்

அரசிருக்கை.

சொல்லமைச்சர்சூழ்ந்துவரத் துளசிமகராஜன்
வல்லமுடிதரித்து வண்செங்கோல்கைப்படித்து

ஆலவட்டஞ்சாமரைக ளணியணியாய்வீசிவரக்
கோலமுள்ளமாதர்நிறை கும்பமெடுத்துவர
ஆலாத்திதீப மரிவைமார்தாங்கிவரச்
சீலமறையோர்கள் செயவாழ்த்துகூறிவரக்
கன்னியர்களாடிவரக் கணிகைமார்பாடிவரக்
மன்னர்புடைநெருங்க மற்றுமுள்ளோர்தாநெருங்க
வட்டக்குடைபிடிக்க வான்வீரர்தாந்துடிக்க
பட்டுக்கொடிபிடிக்கப் பலவிருதுதான்பிடிக்கப்
பற்பலவாத்தியங்கள் பரவைபோற்சத்தமிட
சொற்புலவோர்நாற்கவியஞ் சொல்லித்துதித்துநிற்க
சின்னங்களெல்லாஞ் சிறப்பாய்ப்பிடித்துநிற்க
மன்னியநாற்சேனை வகைவகையாய்ச்சூழ்ந்துநிற்க
அட்டசிங்கந்தாங்கு மாஸ்தானமண்டபத்தில்
பட்டமன்னரோடுமன்னர் பண்பாயக்கொலுவிருந்தார்
மண்டலத்தைதான்மதிக்கு மன்னன்மணிமுடித்தான்
கடலெல்லாந்தான்மதிக்குங் காவலன்தன்கையாழி
வாகுவலமிந்தான் வானுலகைத்தான்மதிக்குஞ்
சேகுவயிரமணி செகத்தைவிலைமதிக்குஞ்
மாற்பிற்பதக்கநிறை மதியொளியைமாற்றிவிடுஞ்
சோர்விலொளிமணிகள் சூரியனைத்தோற்கடிக்கும்
இந்தவகைப்பணிக ளிட்டிருக்குமன்னர்முன்
பந்தமொடுதேசமன்னர் பகுதிகொடுத்துநிற்க
கட்டியர்களெச்சரிக்கக் கைகட்டிகூடிநிற்க
நட்டுவர்பின்மாதர்பல நாட்டியங்கள்செய்துநிற்க

வெள்ளித்தடிக்காரர் விதம்விதமாய்வந்துநிற்க
துள்ளும்படைவீரர் துடிப்புடனேவந்துநிற்க
சேனைத்தலைவரெல்லாந் திறமுடனேசேர்ந்துநிற்க
யானைத்தலைவரெல்லா மஞ்சலொடுசார்த்துநிற்க
தையலர்கள்சங்கீதந் தாம்பாடிமுன்புநிற்க
மங்களவாழ்த்துநிறை மங்கிலியர்வாழ்த்திநிற்க
சங்கையில்லாமல்பலர் தானங்கொடுத்துநிற்க
எங்களரசனு ரிருக்குமந்தவேளையிலே
பொங்கமுடனவ்வரசன் புத்திரனில்லாமையினல்
வேதாந்தவேதியரை வேதப்பிராமணரைச்
சாதகரைமற்றுமுள்ள சாத்திரத்தில்வல்லோரைப்
பார்த்தேயொருவார்த்தைப் பார்த்திபனுர்சொல்ல லுற்
கீர்த்திபெற்றவிற்பனரே கேள்வியினில்வல்லவரே [றூர்
அறுபத்துநான்குகலை யாவுமுணர்ந்தவரே
மறுவில்லாவென்குடிக்கு மைந்தனில்லாமையினல்
சிந்தைதளர்ந்து திகில்கொண்டேன்டன்னுளும்
எந்தவழியும்பிள்ளை யெய்தும்வழிசொல்வீரென்று
பூதளமாளுங்காசிப் பூபாலன்சொன்னவுடன்
வேதபிராமணர்கள் விற்பனர்கள்சொல்லலுற்றூர்
அட்டதிக்காளும் வல்லரசச்சிரோமணியே
பட்டந்தனக்குப்பிள்ளை பண்பாகவேண்டுமென்றல்
காசிநதியாடிக் கருதுமுக்காலையிலும்
ஈசன்விசுவநாத னெழிலானசந்நிதிக்குள்
சென்றபிஷேகமுதல் செய்வித்துப்பின்சிவனை

என்றும்வணங்கியார்க்கு மெண்ணுன்குதருமஞ்செய்யில்
அவனியொருகுடைக்கீ ழாளமகன்பிறப்பான்
சிவனருளாலேயுமக்குச் செல்வம்பெருகுமென்றார்
சாத்திரமார்கள்சொன்ன சன்மார்க்கச்சொற்கேட்ட
மாத்திரந்தீர்த்த மாடமன்னனெழுந்திருந்தான்.

தீர்த்தமகிமை.

கன்மவினைகளெல்லாங் கட்டறுக்காசிநதி
தன்மஞ்செய்வோர்க்குமுத்தி தானளிக்குங்காசிநதி
பிள்ளையில்லார்மூழ்கிற் பிள்ளை தருங்காசிநதி
வள்ளல்சடையினின்று வந்துலவுங்காசிநதி
பிரியமுடன்மூழ்கிற் பிறப்பறுக்குங்காசிநதி
அரிக்குமொருபதவி யளித்திட்டகாசிநதி
இந்தநதியாட வேந்தன்மனைவியொடும்
அந்தவினத்தோடு மளவில்சனத்தோடும்
வந்துநற்கங்கைதனில் மனைவிகரம்பிடித்துச்
சிந்தைமகிழ்ந்து திவ்வியதீர்த்தாடியபின்
பல்லாயிரங்கோடிப் பிராமணர்க்குத்தானஞ்செய்து
இல்லார்பல்லார்க்குத்தான் ஏகமாய்செய்தபின்பு
காசிவிசுவநாதர் கனகோபுரங்கள்கண்டு
ஆசையுடன்வணங்கி யக்கோயினுடிமன்னன்
மன்னர்படைசூழ மந்திரிமார்தாந்தாழ்க
சந்நிதிவீதியிலே தார்வேந்தன்வந்தபின்பு

தலமகிமை.

அண்டத்தளாவும்பல வானபொற்கோபுரமும்
எண்டிசைக்குந்தோற்றுஞ் செம்பொனிலங்குந்திருமதி
சொற்கத்தளாவிநிற்குந் துவசமணித்தம்பங்களும் [லும்
கற்களிழைத்திலங்குங் கனமான தூஸ்பிகளும்
எங்குஞ்சிவாலயமு மெழிலானலிங்கங்களும்
தங்கக்கற்போட்டிருக்குந் தளவரிசைசித்திரமும்
மூலைக்குமூலை முத்தால்விளக்குகளுஞ்
சாலைக்குச்சாலைத் தங்கவிளக்குகளுந்
சேர்விளக்குஞ்சீர்விளக்குந் திருவாட்சிநல்விளக்கும்
பார்விளங்கக்கோபுரத்திற் பதித்தவிளக்குகளுஞ்
சொல்லுநவமணிகள் சொலிக்கும்விளக்குகளும்
எல்லாவிளக்குமந்த வீசனூர்நற்றலத்தில்
இல்லாப்பொருள்களிந்த வீரேழுலகிலில்லை
அல்லும்பகலும் பகுத்தறியாதசந்நிதியில்
வாழுமறையவர்கள் வரிசையெடுத்துப்பலர்
சூழும்படியரசன் சமுகத்தில்வந்துவாழ்த்தி
அந்தமறையோர்க ளரசனைக்கோயிலுள்ளே
சிந்தைமகிழ்ந்துவதுஞ் செல்லச்சுவலிங்கமுன்
கொண்டுவிடுத்தபின்னர் கொற்றவன்கைகுவித்துச்
தொண்டுபுரிந்துசிவன் துங்கவடிதொழுதால்

மூர்த்திமகிமை.

கண்டார்தமக்குமுத்தி களித்தருளுங்கரசிலிங்கம்
தொண்டுபுரிந்தோர்க்கும் சொர்க்கம்கொடுக்குலிங்கம்

சேத்திரத்திற்சேர்ந்தோர்க்குச் சிவலோமீயும்லிங்கம்
தோத்தரித்தபோர்களுக்குச் சூழ்வினைநீக்கும்லிங்கம்
வேண்டும்வரங்களெல்லாம் விரும்பிக்கொடுக்கும்லிங்கம்
யாண்டுப்பிறவாத்தன்மை யார்க்குங்கொடுக்கும்லிங்கம்
எந்தத்தலத்து மிணையில்லாப்படிக்கலிங்கம்
இந்தத்தலத்து மேன்மைசெய்துவிஸ்வலிங்கம்
தன்னைப்பணிந்தரசன் தாழ்ந்துவணங்கிவீழ்ந்து
என்னைக்காப்பாற்றிபிள்ளை யீந்தருள்செய்யுமென்று
பூசைநைவேத்தியங்கள் புரிவித்துநல்லிசைகள்
ஆசையுடன்பாடி யானந்தக்கூத்தாடிக்
காவலரண்மனைக்குள் காவலன்போய்புகுந்து
ஆவலுடனே யன்னமருந்திக்கொலுவில்வந்து

அரசன் முப்பத்திரண்டறமுஞ்செய்தல்.

மந்திரிமார்களைத்தான் வகைவகையாய்வரவழைத்து
தந்திரிமார்களையே தந்தரமாய்வரவழைத்து
வேதியர்கள்சொன்ன விதிப்படிக்குத்தர்மஞ்செய்ய
நீதிமன்னன்பக்கலிலே நின்றவசைப்பார்த்துரைப்பான்
அடிக்கடிக்குநன்மதிசொல் லமைச்சர்களேகேளுங்கள்
படிக்குளவிளங்குகின்ற பலமானதானமெல்லாம்
என்பெயராலட்டதிக்கு மெழில்பெறவேசெய்வீரென
நன்மதிசேர்மந்திரிமார் நராதிபனுர்சொற்கேட்டு
திக்குக்குத்திக்குத் திரளானசத்திரமும்
வொக்கவுலகமெங்குஞ் சொல்லரியவாவிகளுங்

மண்டலமெங்கும் வகைவகையாய்கோவில்களும்
கண்டங்களொன்பதிலுங் கனந்தமடந்தடவும்
கட்டுவித்தார்காசிநகர் காவலென்றன்சொற்படிக்குக்
பட்டணத்தரசரெல்லாம் பார்த்துமனமகிழக்
கோடிபிராமணர்க்குக் கொடுத்தான்பலகோடி
செம்பொன்தேடிப்பலதருமஞ் செய்துவிட்டான்தேர்வே
கன்னிகாதானங் கணக்கில்வெகுகோடி [ந்தன்
அன்னமிடுதான மளவில்பலகோடி
பூதானவேதியர்க்குப் போற்றும்பலகோடி
கோதானமீந்தணர்க்குக் கொடுத்தான்பலகோடி
நீர்ப்பந்தல்பூமியெங்கு நிகரில்பலகோடி
மோர்ப்பந்தலம்புவியில் மொழியிற்பலகோடி
அறவைப்பிணஞ்சுடுத லதுவும்பலகோடி
பறவைச்சிறைவிடுத்தல் பாரிற்பலகோடி
கண்ணாடிகாதோலை கண்மருந்துபெண்போகம்
வண்ணானெடுசுண்ண மயிரின்சிறைகளைதல்
விலங்கிற்குணவுவிளை கொடுத்தேயுயிர்காத்தல்
துலங்குமகப்பால்கொடுத்தல் சோலைசிறைச்சோறிடுத
தின்பண்டநல்கல் சேர்வளர்த்தலையமிடல் [ல்
வன்கல்வியொர்க்குணவு வாய்த்தபசுவிற்குப்புல்
இந்தவகைத்தரும மிறைவன்கொடுத்தபின்பு
அந்தமுடன்சிவனை யரசன்மனைவியொடுஞ்
சந்ததமும்காசியில்வாழ் சங்கரனைத்தானோக்கி
சிந்தைமகிழ்ந்து செய்தார்பலவிரதம்

அந்தவகையறிந்தே யாதிசிவனன்போடு
சந்தானங்காசிமன்னன் றன்மனைவிக்கேகொடுத்தார்.

மதுரைவீரனுற்பத்தி.

மேகந்தனைப்பழிக்கு மெல்லியநற்கூந்தலினாள்
தோகைமயிலைப்பழிக்குஞ் சொல்லரியசாயலினாள்
சந்திரனைத்தான்பழிக்குஞ் சொல்லரியசாயலினாள்
இந்திருக்கொப்பாக விலங்குமழகுடையான்
அன்னந்தனைப்பழிக்கு மசைந்ததிருநடையாளமின்
னலிடைப்பழிக்கு மோளைப்பூநுண்ணிடையாள்
பம்பரத்தைத்தான்பழிக்கும் பணைத்தவிளமுலையாள்
செம்பொற்சரிகைக் சிறக்குமெழிற்கலையாள்
கம்பவாழைத்தொடையாள் கற்பமிகுநிலையாள்
துளசிமகாராசனுக்குச் சொல்லுமுயிர்த்துணையாள்
வளமிகுந்த கற்பூரவல்லிதிருவயிற்றில்
கங்கையணிசிவனருளாற் கருத்திரண்டகாலையிலே
மங்கைக்கரசி மதிமயக்கஉரனுள்காண்
மூன்றானதிங்களிலே முலைகறுத்துமுகம்வெளுத்தாள்
தோன்றுமயக்கமிகத் தோற்றமுறவாடிநின்றாள்
நான்கானதிங்களிலே நன்மசக்கைக்கொண்டாள்காண்
தேன்கதலிமாவருக்கை தித்திப்பிலிச்சைகொண்டாள்
ஐந்தானதிங்களிலே யம்பொன்போல்மேனிகொண்டாள்
சிந்தரகுலமிகுத்துச் சிந்தைமிகத்தளர்ந்தாள்
ஆறானதிங்களிலே யடிவயிறுதான்தளர்ந்தாள்.

விருனவேழுதிங்கள் மேவவிடைசிறுத்தாள்
எட்டானதிங்களிலே வெண்ணுதுமெண்ணிநின்றுள்
ஒட்டுமென்பான்றிங்களிலே யுறக்கமிகவிடுத்தாள்
பத்தானதிங்களிலே பாலகனைப்பெற்றெடுத்தாள்
முத்தானவாய்திறந்து மொய்மகனுந்தானழுதான்
ஆயிரங்கோடி கழகுள்ளசூரியன்போல்
மாயிருஞாலத்தில் வாய்க்காதரத்தினம்போல்
தங்கத்தைக்காச்சித் தரையில்கவிழ்த்ததுபோல்
ஒருகோடிசூரியரை யுருக்கிக்கவிழ்த்ததுபோல்
இருகோடிசந்திரரை யெடுத்துக்கவிழ்த்ததுபோல்
கோடிமதன்றுருக கொண்டுதிரண்டதுபோல்
நீடியபூமியிலே நிருபன்பிறந்தவுடன்
தேவாதிதேவரெல்லாந் தேன்மாரிதான்பொழிந்தார்
பூவுலகெல்லாம் பூமாரிதான்பொழிந்தார்
அந்தரதுந்துமிக ளேந்துமுழக்கிவிட்டார்
இந்திரன்றுன்முதலோரெல்லாரும் வாழ்த்தலுற்றுர்
மண்டலத்திலுள்ளவர்கள் மங்களவாழ்த்துரைத்தார்
விண்டலத்திலுள்ளவர்கள் விதம்விதமாய்வாழ்த்திநின்
றுர், பாலகனைப்பாரிலுள்ளோர்பலரும்வந்துபார்த்தார்க
ள், மாலைசுற்றித்தான்பிறந்த மைந்தனையேபார்த்தார்கள்
கொடிசுற்றித்தான்பிறந்த குழந்தைகளைப்பார்த்தார்கள்
துடியிடையார்தோழிமார் துரிதமுடனேடிவந்து
தொல்லுலகையாண்டுவரும் துளசிமகராசன்பின்பு
வல்லகரங்குவித்து வாய்வாழ்த்தலுற்றுர்

எங்கள்குலதெய்வமே யிறைவரேநீர்கேளீர்
மங்காதசெல்வமுள்ள மன்னவரேநீர்கேளீர்
திக்கெல்லாமாளவொரு செல்வனார்தாம்பிறந்தார்
மிக்கவடிவுடைய வேந்தனார்தாம்பிறந்தார்
பிள்ளைகலிதீர்க்கப் பேரரசர்தாம்பிறந்தார்
வள்ளலேயிவ்வடிவாய் மாநிலத்திற்றாம்பிறந்தார்
மாதர்தமைமயக்கும் மன்மதனார்தாம்பிறந்தார்
காதல்மிகவளிக்குங் கட்டழகர்தாம்பிறந்தார்
பிறந்திலேயாதும் பிசகில்லையெம்மரசே
சிறந்தமகன்பிறப்பிற் றீங்கொன்றுண்டெம்மரசே
மாலைசுற்றித்தான்பிறந்தால் மாமனுக்காகாதென்பார்
காலப்பெருங்குற்றந் தாரணியோர்சொல்வார்கள்
கொடிசுற்றித்தான்பிறந்தால் குலத்துக்காகாதென்பார்
வடிவுபெறுமகற்கு மற்றைக்குறைவில்லையே
என்றந்தத்தாதியர்க ளேந்தலுக்குச்சொன்னவுடன்
குன்றனையதோள்நிமிர்ந்து கொற்றவனார்தாமகிழ்ந்தார்
பிள்ளைபிறந்ததென்று பேரரசர்தாங்களித்தார்
கொள்ளைகொடுத்தார் குறைவில்களஞ்சியங்கள்
சீனிசருக்கரையைத் திக்கெட்டும்வழங்கிவிட்டார்
மாணிலத்திற்பின்னு மனமகிழ்வாய்ப்பிரித்துவிட்டார்
அந்தப்புறத்தி லரசரெழுந்தருளிச்
சந்தமுள்ளதாதியரைத் தானழைத்துத்தம்மகனை
எடுத்துக்கொண்டுவரவே யிறைவர்திருவாக்களித்தார்
அடுத்திருந்ததாதியர்க ளப்பொழுதேகொண்டுவந்து

மன்னவர்முன்பாக வைத்தார்பூந்தொட்டிலுள்ளே
சின்னக்குழந்தை திருமுகத்தைத்தான்பார்த்து
என்றுமடையாதவெக்களிப்புத்தானடைந்து
நின்றுமகிழ்ந்து நெடுநேரந்தான்பார்த்துக்
கொண்டுபோவென்றுசொல்லிக் கொடுவிலரசன்வந்து
மண்டலத்தையாளும்வல்ல மந்திரிபைத்தானழைத்து
சோதிடத்தில்வல்லவரைச் சுருக்கிழழையென்றுசொன
நீதிதவறுமைச்ச னிருபனுர்சொற்படிக்குச் [னுர்
சோதிடரைத்தானழைத்தான் சோதிடருமோடிவந்து
ஆசையுரைத்துமஞ்ச ளட்சதைவேந்தர்களித்தார்
மன்னன்மணியாசனத்தை மறையோர்க்குத்தான்கொடு
த்தான், என்னையழைத்தவிதமென்னென்றூர்சோதிடரு
ம், அந்தமொழிகேட்டே யரசன்விளம்பலுற்றான்
வெள்ளிக்கிழமைதனில் விடிந்துபத்துநாழிகையில்
வள்ளல்கழுத்திலே மாலைசுற்றித்தான்பிறந்தான்
திதிகரணம்வாரஞ் சிறந்தயோகமிடுநாள்
ததியறியந்துபஞ்சாங்க சாத்திரத்தைப்பாருமென்றூர்
அப்படியேசோதிடரு லந்தணருந்தான்பார்த்து
செப்பருநாளுந்திங்களுந் திதிவாரந்தீங்கெனவே
சோதித்தறிந்தபின்பு துளசிமகாராசனுளம்
பேதிக்கச்சோதிடரும் பேசத்தொடங்கலுற்றூர்
திக்கெட்டுங்கீர்த்தி செலுத்துஞ்செங்கோல்வந்தே
தக்கதவம்புரிந்து தான்பெற்றபிள்ளையது
சனனமெடுத்ததினந் தாரணிக்கேயாகாது

கனமானபொல்லாங்கு காசிநகர்கெய்துவிடும்
நாளுங்கோளும்பிறந்த நாட்டுக்கேயாகாது
மீளும்பெரும்போரும் மிகச்சிறியபிள்ளையினல்
குழந்தையைவைத்திருந்தாற் கோத்திரத்திற்காகாது
இழந்திடுவீர்நாடுநக ரிக்குழந்தைதன்னுலே
அருமகனைவைத்திருந்தா லரண்மனைகள்வெந்துவிடும்
திருமகனைவைத்திருந்தால்சீர்மையெல்லாம்வெந்துவிடு
என்றுமிகவுரைத்தா ரெழிலானசோதிடரும்
குன்றிவயிறெரிந்து கோபமிகக்கொண்டரசன்
அந்தமொழிகேட்டே யடித்தலறிதான்வீழ்ந்தார்
சிந்தைதளர்ந்து தியங்கிமதிமயங்கி
அப்பாமகனேயன்றே யபயமிட்டுத்தான்புலம்பி
எப்படியென்னசெய்வே னினிப்பிழையேனென்றுசொல
துங்கவுலகாளுந் துளசிமகாராசர் [லத
அங்கம்வியர்த்தே யவனிதனிற்புரண்டு
வாயிலேமண்ணை வாரியடித்தார்காண்
கோயிலிற்றெய்வமெல்லாங் குறித்துமிகவைத்தார்காண்
பேச்சுமூச்சில்லாமற் பிணம்போலுமானுர்காண்
பூச்சக்கிரகாளும் புகழ்காசிமன்னவனுர்
மந்திரிமார்களெல்லா மனதுமிகக்கலங்கி
அந்தவரச னருகினில்சென்றெழுந்து
சுக்குப்பொடிகாதிற் சொரிந்துவாயாலூதி
திக்காளுமன்னவரைத் தெளிந்துவிடச்செய்தார்கள்
சோகமதுதீர்ந்து துளசிமகராசர்

தாகங்தெளிந்துமவர் தனியேயெழுந்திருந்து
கோடிதருமஞ்செய்து கொடும்பாவியானேனென்றார்
நாடித்தவம்புரிந்து நான்பாவியானேனென்றார்
முற்பிறப்பிச்செய்தவினை மூண்டதென்றாரிப்பிறப்பில்
நற்பிள்ளைதன்னையினி நான்செய்வதென்னென்றார்
வந்திருந்தசோதிடர்கள் மன்னவனைத்தான்பார்த்து
இந்தமகனையினி யிங்குவைக்கலாகாது
எந்தவிதமும்பிறற் கீந்திடுதலுத்தமமாம்
அந்தவிதமன்றிக் காட்டகத்தில்விடமத்திமமாம்
என்றமுறையோர்பெரியோ ரெடுத்துரைத்தாரிவ்வார்த்
குன்றனையதோள்வேந்தர் கோவென்றழுதுவிம்மி [தை
ஐயையோதெய்வமே யடாதமொழிகேட்டேன்
உய்யும்வகையறியே னேகோகோவென்செய்வேன்
இறந்தபிள்ளையைக்கொடுக்க யார்க்குமனந்துணியாதே
பிறந்தபிள்ளையைக்கொடுக்க பேருலகிற்றுணிகுவரோ
உயிரோடுபிள்ளைதனை யோட்டிவிடவெண்ணுவரோ
ஆணுலும்பாவியென்போ லம்புவியிற்கண்டிலனே
தேனாரிகழிமுடிச் சிவனார்செயலிதுவோ
வேதன்விதித்த விதியின்பயனிதுவோ
ஏதுமறியேனென்றே யிறைவர்மனந்துணிந்தார்
(மதுரைவீரசுவாமியை வனத்தில்விடச்சொன்னது.)
தூதுவரைவிட்டரசர் தோழிகளைவரவழைத்து
மாதுகற்பூரவல்லி மைந்தனைப்பொற்றட்டில்வைத்து
மேதினியோர்காணமல் மிகவிருண்டகாட்டினுள்ளே

காதல்திருமகனைக் கையிலேந்திக்கொண்டுவைத்து
வாருங்களென்றுசொல்லி மன்னவர்வலுவாக்களித்தார்
காரும்வேருண்டோடுங் கருங்கூந்தற்றோழியர்கள்
அந்தமொழிகேட்டே யந்தப்புறஞ்சேர்ந்து
கன்னிகற்பூரவல்லி கடிவாசலுட்புகுந்து
கண்ணீர்ததும்பிடவே காயநடுக்கிடவே
வண்ணமுகஞ்சோர்ந்து வாடிமிகவழுது
செல்வன்பிறந்ததினந் தேசத்துக்காகாதென்று
வல்வேந்தருன்மகனை வனத்தில்விடவாக்களித்தார்
எங்கட்கரசியரே யாங்களென்னசெய்வோமம்மா
செங்கோலரசரது சித்தமறியோமம்மா
என்றந்தத்தாதியர்க ளியம்பும்முறைகேட்டு
குன்றினையொத்தஸ்தனத்தாள் கூக்குரலிட்டேயழுது
கண்ணிலறைந்துகொண்டாள் கையைமுறித்துநின்றாள்
மண்ணில்விழுந்தழுதாள் மார்பிலடித்தழுதாள்
கூந்தல்விரித்தரசி கூச்சலிட்டுத்தாமழுதாள்
ஏந்திழைமார்களேயான் என்செய்வேனென்றழுதாள்
மைந்தன்றனையிழந்த மாபாவியென்பாரே
அழகுமகனில்லாத அரும்பாவியென்பாரே
காட்டில்மகனைவிட்ட கடும்பாவியென்பாரே
நாட்டிற்பலபேர்கள் நகைத்திகழ்ந்துசொல்லாரோ
என்னசெய்வேன்சிவனே யென்றேங்கிமிகத்துடித்து
தன்விதியைத்தானினைந்து சலித்துமனந்நொந்து
மூட்டியழுதாள்மகன் முகம்பார்த்துத்தானழுதாள்

கட்டியெடுத்துமகன் கண்முகத்தைப்பார்த்தழுதாள்
அப்பாமகனே யென்னருமைத்திருமகனே
இப்பாகையாளவந்த யெங்கள்குலக்கொழுந்தே
தேடக்கிடையாத செழுந்தேனேதெள்ளமுதே
நாடாளவந்தவெங்க ணுயகமேநற்றருவே
தவமாத்தவமிருந்து தான்பிறந்தரத்தினமே
அவமானகாட்டில்விட அரசர்மனங்கொண்டாரோ
மாபாவியென்வயிற்றில் வந்துதித்தபாக்கியமோ
பூபாலருனைவனத்தில் போக்கிவிடச்சொன்னரே
இந்தவிதிக்கோநீ என்வயிற்றில்வந்துதித்தாய்
அந்தப்பிரமனுனக் கமைத்தவிதியிதுவோ [ன்
பின்ளையில்லையென்றுமுன்னல் பெருந்தவசுதான்புரிந்தே
வள்ளலில்லையென்று பலவகைவிரதம்நான்ரிரிந்தேன்
ஐயோதிருவுளமே யாதிசிவனேயென்று
கையைநெரித்துக் கத்திச்சலித்திளைத்தாள்
பக்கலிலேநின்றிருந்த பாங்கிமார்தாமெடுத்து
மிக்கதுயர்நீங்க மெல்லியரைத்தேற்றுவித்தார்
பட்டணத்துமன்னர் பலராசர்மந்திரிகள்
இட்டமுள்ளசேவகர்கள் சேனைதலைவர்மற்ருேர்
கற்பூரவள்ளியடி மனையினுட்புகுந்தார்
கற்பூரவள்ளியருங் கணவனையேகண்டழுதாள்
துளசிமகாராஜர் துயரமிகவடைந்து
தளராதேயென்றந்தத் தையலரைதேற்றுவித்து
மன்னன்மனைவியரு மண்ணுருகத்தாமழவே

அன்னைதுயர்கண்டு அனைவோருமேயழுதார்
பட்டணத்திலுள்ளவர்கள் பார்த்துமிகவழுதார்
சொர்ணமுடிமன்னரெல்லாஞ் சூழ்ந்துமிகவழுதார்
அப்போதுதங்கத்தினு லமைந்திலங்குந்தட்டினுள்ளே
இப்போதுபாலகனை எடுத்துவளர்த்துமென்று
பாங்கியற்குப்பார்வேந்தர் பகர்ந்திட்டாரப்பொழுது
தாங்கினார்மகனைத் தாதியார்பொற்றட்டில்வைத்து
மன்னர்துளசி மகாராஜர்முன்புவந்தார்
அன்னவரசாணி முத்துப்பல்லக்கை
கொண்டுவரச்சொன்னவிடன் கொண்டுவந்தார்பொற்சி
மண்டலமாளு மகுடமன்னரக்கணமே [விகை
மன்னுமுத்துத்தண்டிகையில் மைந்தனையேற்றுவித்து
இந்தக்குழந்தைதனை எல்லோருங்கொண்டேகி
காட்டில்விட்டுவாருமென்று கட்டளையிட்டாராஜர்
கெட்டவர்கள்செங்கோலின் கீழ்ப்படிந்துபோகலுற்றார்
முத்துசிவிகையைச்சூழ் முடிமன்னர்முக்கோடி
யானையொருகோடி யணித்தேரிருகோ
சேனைபலகோடி செயவீரரெண்டுகோடி
ஆட்டமும்பாடல்களு மதிர்வேட்டுக்கோஷ்டமுடன்
கூட்டமுடன்மகனை கொண்டுநடக்கலுற்றார்
காசிநகரைவிட்டுக் கடுவெளிவந்தார்கள்
தேசிலகுமன்னர்வாழ் சிறப்பானவீதிவிட்டு
யானைவிலைமதிக்கு மழகுமன்னர்வீதிவிட்டு
சேனைத்தலைவர்வாழுஞ் சிங்காரவீதிவிட்டு

குதிரைவிலைமதிக்குங் குச்சிலியர்வீதிவிட்டு
சதுரில்நடனமிடுந் தாசியர்கள்வீதிவிட்டு
போட்டசட்டைவாங்காத பொந்திலியர்வீதிவிட்டு
கொட்டிப்பலதொழில்செய் கொல்லர்வாழ்வீதிவிட்டு
காசிநகரைவிட்டுக் கானகத்திற்போய்புகுந்து
தேசமன்னரெல்லவருஞ் சிறந்தவனம்புகுந்து
காரைபடர்ந்தவனங் கருங்கிளாப்பூர்க்கும்வனம்
சூரைபடர்ந்தவனஞ் சுண்டக்காய்காய்க்குவனம்
குன்றுமலைகளிலே கொடும்புலிகள்சூழும்வனம்
ஆறுமடுவுகளு மழகாநிறைத்தவனம்
கூவும்பெருமிருகங் குலாவியிருக்கவனம்
சிங்கம்புலிகரடி செந்நாய்நெருங்குவனம்
எங்கும்விஷப்பாம்பு இருந்துகுலாவும்வனம்
இன்னம்பலமிருக மிருக்கும்வனந்தனிலே
மன்னுமகனைமுத்து வண்டிகையோடிறங்கி
திட்டமுள்ளநல்லிடத்திற் றெரிந்துமவர்பார்த்து
பொன்றட்டோடுபாலகனைப் புகழாகவேயெடுத்து
மண்ணில்வைத்துப்பாலன்றன் மதிமுகத்தைப்பார்த்தா
கண்ணீர்சொரிந்தார் கதறியழுதார்கள் [ர்கள்
திரண்டுவந்தசேனைகள்தான் திகிலடைந்துதாமழுதார்
இரண்டவனந்தனிலே எல்லோருந்தாமழுதார்
காட்டைவிட்டுநாட்டிற் கடுகநடந்தார்கள்
மலைகள்குகைகடந்து வந்தார்கள்பட்டணத்தில்
கோட்டையிற்செல்லுதற்குக் குறுகிநடந்தார்கள்

உலகாளுமன்னவர்க்கே யுத்தர்ரஞ்சொன்னுர்கள்
அவரவர்வாழிடத்தி லன்பாயிருந்தார்கள்
நவையில்லாப்பாலனுக்கு நடக்கின்றவாறுசொல்வேன்

மதுரைவீரனுக்கு நாகம்உதவிசெய்தது.

பாலகனுமப்போது பாரவனந்தனிலே
ஓலமிட்டுத்தானலறி யோங்கியழுகையிலே
மாமரத்தினிழலிலே மைந்தன்றனித்திருந்து
தாமரைநீர்போல் தயங்கியழுகைகண்டு
மாணிக்கநாகமது மனதுமிகவுருகி
யாணிப்பொன்போல்விளங்குமரசன்மைந்தன்பக்கலிலே
வந்துபடம்விரித்து மதிமுகத்தைதான்பார்த்து
அந்தக்குழந்தைக் கரியமுத்தந்தான்கொடுத்து
பத்தியும்யோகமும் பொருந்திபிருப்பதற்கு
நாக்கில்சரஸ்வதிதா னன்றாகத்தான்விளங்க
முகத்தில்திருவழகு முன்னின்றுதான்விளங்க
எதிர்த்தாரைவெல்ல யேமனதுஅட்சரமும்
நீச்சனிடவீட்டில் நிஷ்களங்கமாய்வளர்ந்து
அலங்காரவீரனென்று ஆனதொருபேரும்வைத்து
மன்னர்களைவெல்ல மந்திரவாள்கைகொடுத்து
வீரப்பனென்றுசொல்லி விதபாய்மதுரையிலே
பூசைபலிகொடுத்துப் போற்றித்துதித்திடவே
இறந்தும்புவியோரை என்றென்றுங்காத்திடுவாய்
மீனுட்சிகம்பத் தடிவிளங்கநீயிருப்பாய்

முன்பூசைகொண்டு முப்பூசைதான்பெறுவாம்
பத்துவயதிலே படைமுகம்வென்றிடுவாய்
கள்ளரைவென்று கனமதுரையாண்டிடுவாய்
பெண்களினாலே பெரும்பதத்தைச்சேர்ந்திடுவாய்
என்றிமேசொல்லி இனிதாகத்தான்வாழ்த்தி
தேவாமிர்தத்தை தினந்தோறுந்தான்புகட்டி
இப்படியாக யிருக்குமந்தவேளைலலே

மதுரைவீரனைச்சக்கிலிச்சிகண்டடேக்கிறது.

காசிநகரைச்சேர்ந்த கனகாயகண்டதொரு
பாலைவனந்தனிலே பாதரட்சைதைத்துவளர்
மாதிகச்சின்னான் மனைவியாஞ்சச்சிலிச்சி
மைந்தனில்லையென்றுசொல்லிமதிமயங்கித்தானிருந்து
பாதரட்சைதானம் பரிவாகத்தான்கொடுத்து
காசிவிஸ்வநாதசையும் கனகவிசாலாட்சியையும்
பூசையனுட்டானம் புதிபதவஞ்செய்து
மாதிகன்தேவியையும் பன்னனுந்தனைமெழுகி
போசனஞ்செய்து புண்ணியமிகச்செயது
இப்படியாக இருக்குமந்தநாளையிலே
பாதரட்சைதைத்திடவே பாங்கானமாதிகனும்
வாறுகளும்சம்பகளு வகையாகவூறவைக்க
ஆவாரம்பட்டைட்டைக்கு அன்புடனேபோவென்றான்
நல்லதென்றுசொல்லி நாமுளனேமங்கையுமே
அசைந்துநடந்தாளே அந்தவனந்தரனோக்கி
காசிநாடாளுமமன்னன் கண்மணிக்குநேரான

பாலகனிருக்குமந்த பாரவனம்நோக்கி
வழிகூடிப்போகையிலே மங்கைநல்லாளப்போது
காணுதநற்சகுனங் கண்டாளேகண்களிக்க
காகம்வலமாச்சு காடையிடமாச்சு
மங்கிலியப்பெண்கள் வாழ்த்திவரக்கண்டாளே
தையனல்லாள்தாமுந் தண்ணீரைத்தான்கொண்டு
நிறைகுடங்கொண்டு நேராகத்தான்வரவே
கண்டுமனமகிழ்ந்து காரிழையுமப்போது
அசைந்துநடந்தா ளன்னம்போலவ்வனத்தில்
காட்டில்புகுந்தாளே காரிழையுமப்போது
அரிவாளுங்கைப்பிடித்து யாவாரப்பட்டைவெட்டி
பட்டையெடுத்துக்கட்டி பயணமதாய்வருகையிலே
மாமரத்தின்கீழே மைந்தன்தனைக்கண்டாள்
நாகத்தைப்போற்றிசெய்து நலமுடனேதெண்டனிட்டு
மன்மதனுக்கொப்பான வடிவுள்ளபாலகனை
கண்டுமனமகிழ்ந்தாள் காரிழையுமப்போது
பிள்ளைகலிதீர்க்கவந்த பெருமையுள்ளமைந்தனென்று
வாரியெடுத்து மார்போடேதானணைக்க
பைங்கிளியாதன்னுடம்பு பசுமைநிறந்தானுச்சு
பாரஸ்தனங்களிலே பாலுஞ்சொரிந்திடவே
பாலகனும்பால்குடித்துப் பசியாறினபின்பு
தோகைமயிலனையாள் குளிர்ந்துமனமகிழ்ந்தாள்
பாலகனைமடியில்வைத்துப் பட்டையுந்தானெடுத்து
வேர்த்துவிரிவிரித்து வீட்டுக்குவாராள்காண்

இவள்வருவதற்குள்ளாக இந்நேரமென்னவென்று
சந்தேகந்தோன்றிச் சக்கிலியன்தானெழுந்து
கையில்தடியெடுத்துக் கனத்ததொருதோளில்வைத்து
பூமியதிர்ந்திடவே பொற்கொடியைத்தான்தேடி
கோபமிகக்கொண்டு கொம்பனையாள்முன்வந்து
இன்னேரங்கானகத்தி லென்செய்தாய்பெண்ணேயென்
சக்கிலியன்தானுந் தடியெடுத்துநோக்கையிலே [று
அடியாதேயென்கணவா அதிசயந்தான்சொல்லுகிறேன்
கோபத்தைதானடக்குங் குணமுள்ளபத்தாவே
மைந்தனில்லாததினால் மகாதவங்கள்செய்தோமே
பிள்ளைகவலைப் பெருங்கவலைதீர்ந்ததிப்போ
ஆதிசிவன்கர்த்தனமக் காண்பிள்ளைதான்கொடுத்தார்
மாணிக்கம்போலந்த மைந்தன்றனையளித்தார்
இந்தாரும்பிள்ளையென் றேந்திழையாள்தான்கொடுத்தா
கட்டோடேபாலகனைத் தான்வாங்கிச்சக்கிலியான் [ள்
இன்பக்கனல்குளிந்து இருபுஜமும்பூரித்தான்
வீட்டில்தான்வந்து மெல்லியுடன்சின்னறும்
சக்கிலிச்சிகையிற் குழந்தைதனைக்கொடுத்து
தச்சனொருவனைப்போய்த் தானழைத்துவந்தான்காண்
மைந்தனுக்குத்தொட்டி வளமுடனேசெய்யுமென்றான்
அப்படியேதைச்ச னமைத்தானேதொட்டிலுமே
மாணிக்கத்தைப்புதைத்து வச்சிரத்தால்பூண்கட்டி
பச்சைமரகதமும் பாங்குடனேதானமர்த்தி
தங்கக்கொலுசுசெய்து தான்பூட்டிதச்சனுமே

கொடுத்திடவேமாதிகனும் கோவையருமேவாங்கி
பாலகனைத்தாமெடுத்துப் பதிவானதொட்டிலிலே [ருள்
கண்மணியைத்தான்வளர்த்திக் காரிழைதாலாட்டலுற்

மதுரைவீரனுக்குத் தாலாட்டல்.

ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ
புத்திரனேயுந்தனுக்குப் புகழ்ச்சியுடன்தாலாட்ட
நித்திரைநீசெய்யுமெந்த னேரானகண்மணியே
கண்ணேயுறங்குறங்கு கற்பகமேநித்திரைசெய்
கண்ணேயென்கண்மணியே கற்கண்டேசற்கரையே
ஆதிசிவன்மகனே ஆரன்மருமகனே
சோதிக்கவந்தவனே துய்யகணபதியோ
தேனனகண்ணே தெவிட்டாததெள்ளமுதே
பாலூறும்வாயுடைய பாலகனேபைங்கிளியே
கானகத்திற்பொங்கமுடன் கவிழ்ந்துவிளையாடக்கண்டு
கானகத்தெடுத்துவந்த நாயகமேகண்வளரீர்
எந்தனுக்குப்பிள்ளையென்று ஈஸ்வரனார்தந்தகண்ணே
சுந்தரமாய்நித்திரைசெய் சொர்னமயத்தொட்டிலிலே
பிள்ளைகவலைப் பெருங்கவலைதீர்க்கவந்த
வள்ளலேகண்ணே மணியேமணிவிளக்கே (ஆ)

மாறுபடாபாலகனே மாசிலாக்கண்மணியே
வேறுபடாபுத்தமுதே விண்மணியேகண்வளராய்
அங்கயற்கண்ணம்மை அருள்பெற்றபாலகனே
எங்கள்குடிதழைக்க என்மகனேகண்வளராய் (ஆ)

இப்படிதாலாட்ட ஏத்தசிறுபாலகனும்
நித்திரையுஞ்செய்து நினைவுவந்தபாலகனும்
பசியெடுத்துப்பாலகனும் பதறியழுகையிலே
தாவியேசக்கிலிச்சி தானெடுத்துப்பால்கொடுத்தாள்
பால்கொடுத்துப்பசியாறிப் பாலனுக்குஅப்பொழுது
எண்ணெய்த்தலையிலிட்டு யிளம்வெந்நீர்தான்வார்த்து
உச்சியூதித்துடைத்து உடம்பெல்லாந்தான்துவட்டி
இட்டமுள்ளநெற்றியிலே திருநீறுகாப்புமிட்டு
நேரானநெற்றியிலே நிலக்காப்புத்தானுமிட்டு
நீலவிழிக்கண்களுக்கு நேர்மையுடன்மையெழுதி
பிள்ளைக்குதிருஷ்டி பிரியமுடன்சுற்றுதற்கு
நெல்லும்அறுகும் நேரானமஞ்சளுடன்
பருத்திவிரைசுண்ணும்பு பரிவாகத்தான்பிசைந்து
தண்ணீர்முகந்துவந்து தாம்பாளத்திற்கலக்கி
திருஷ்டிகழித்ததனைத் தெருவீதியிற்போட்டு
இப்படியாக யினிவளர்க்கும்நாளையிலே
மாதிகனைத்தாமழைத்து மங்கையருமேதுசொல்வாள்

மதுரைவீரனுக்குக் காதுகுத்தல்.

மூன்றும்பிராயத்திலே முத்தமிட்டுக்காதுகுத்த
நல்லநாள்கேட்டு நட்சத்திரந்தான்பார்த்து
இட்டமுள்ளதட்டானைச் சீக்கிரமாயழையுமென்றாள்
அந்தநல்லாள்சொற்கேட்டு ஆனதொருமாதிகனும்
கூட்டிவந்துதட்டானைக் குழந்தையைப்பாருமென்றான்
பார்த்துமந்ததட்டானும் பாலகனுக்கேற்றாப்போல்

தங்கத்தால்கம்பிச் சதிராகத்தான்வளைத்தான்
கீழ்க்காதைமேற்காதைக் கிரமமாய்குத்திவிட்டான்
படியரிசிதட்சணையும் பார்க்கிலேயும்சர்க்கரையும்
அத்தனையுந்தான்கொடுத்து அனுப்பினான்தட்டானை
மாதிகனுமங்கையரு மனதுமிகத்தான்குளிர்ந்து
சந்தோஷமாகித் தயவாயிருபேரும்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே

மதுரைவீரன் சக்கிலியின்வீட்டில் வளருகிறசேதி காசிராஜாவுக்குத் தெரிதல்.

காசிபட்டணத்திலிருக்குங் கனத்தவெகுமாந்தர்களுள்
மாதிகச்சின்னானுக்கு மைந்தன்வந்தசேதிதன்னை
பட்டணத்திலுள்ளசெனம் பாங்குடனேதாமறிந்து
இராஜனிடபிள்ளையென்று நலமாகஓடிவந்து
காசிராஜாவுடனே கணக்காகவந்துசொல்வார்
மாதிகச்சின்னானும் மைந்தனைவளர்க்கின்றான்
என்றவர்கள்சொல்ல இந்தச்சமயத்தில்
இப்பெரியபட்டணத்தி லிருநதோமேயானக்கால்
தன்பிள்ளையென்று தானழைத்துக்கொன்றிடுவான்
மறுதேசம்போய் மங்கையரேநாம்பிழைப்போம்
அப்படியேநல்லதென்று அன்பாயிருவருந்தான்
மைந்தனைத்தானெடுத்து மறுதேசம்போனார்கள்
காடுமலைதாண்டி கடுகநடக்கலுற்றார்
பொம்மணன்சீமைக்கு பொட்டெனவேவந்தார்கள்
யாரென்றுசொல்லி யழைப்பித்தார்பொம்மணனும்

எந்தவூரெந்தநாடு எங்கிருந்துஇங்குவந்தீர்
என்பதற்குமாதிகனும் ஏந்திழையுஞ்சொல்லுகிறான்
காசியென்னும்பட்டணத்தைக் கடந்திவரலாற்றைக்கேள்
பஞ்சைகள்பிழைக்கப் பரதேசம்நாங்கள்வந்தோம்
வயிறுபிழைக்க மறுதேசம்நாங்கள்வந்தோம்
அந்தநல்லசேதி அறிந்தானேபொம்மணனும்
என்னிடத்திற்சேவகமா யிருப்பாயோமாதிகனே
அப்படியேநல்லதென்று னமர்த்தினான்பொம்மணனுஞ்
சேவகஞ்செய்து சீருடனேதானிருந்தான்
சந்தோஷமாகித் தயவாயிருக்கையிலே
பிள்ளைக்குச்சிங்காரம் பிரியமுடன்பூட்டலுற்றான்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நிழல்கண்ணாடியுங்கட்டி
காதிலேமத்திக்காய் கனமாகத்தொங்கலிட்டு
பச்சைக்கல்முருகு பவளத்தால்தாவடங்கள்
காலிற்சிலம்பணிந்து கைகுத்தங்கக்காப்புமிட்டு
பூணாரமெல்லாம் பூட்டினான்மாதிகனும்
நாளொருமேனியுமாய் நலமாகத்தான்வளர்ந்தான்
பத்துவயதானதின்மேல் பதினாலாம்வயதுதனில்
சரிகைசந்திரகாவி தலைப்பாகைகட்டியுடன்
வன்னகம்பிச்சோமன் வகையாயுடுத்தியங்கே
பட்டுகம்பிச்சோமன் பாங்காய்வரிஞ்சிகட்டி
இடதுபுறத்தொங்கலிலே ஏமனிடஅட்சரமும்
வலதுபுறத்தொங்கலிலேவடமலையான்அட்சரமும்
பார்வதிகடாட்சத்தால் பரிவாகவுண்டாச்சு

பஞ்சவர்னப்பட்டாடை பாங்கானசாலுவையும்
முன்கையிற்சந்தனமும் முறுக்கிவிட்டமீசைகளும்
கஸ்தூரிப்பொட்டுமிட்டுக் கனத்ததிருமார்பிலுமே
சந்தனமும்புனுகுந் தாராளமாய்ப்பூசி
இப்படியாய்த்தானே யிருந்துவருகையிலே

மதுரைவீரன் பராக்கிரமம்.

குச்சுவுருமாலைகட்டிக் கூசாமல்வீரையனும்
கச்சைவருந்திகட்டிக் கருங்கச்சைசுங்குவிட்டு
காலில்மிதியடியுங் கையிலுண்டைவில்பிடித்து
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிர்க்கத்தான்கண்டவரை எண்ணியேபாராமல்
கண்டமுனிராட்சதரைக் கண்டதுண்டமாக்கிடுவான்
காளிகதவடைக்கக் கண்டமுனிதெண்டனிட
வேட்டைகளாடுறதும் வேங்கைபுலிகுத்துறதும்
மாதிகன்சொல்கேளான் வனங்களிலேபோய்விடுவான்
கரடிபுலிசிங்கம் காட்டானைகொல்கிறதும்
வேஷங்கள்மாறி வீட்டில்வருகிறதும்
வருகிறதைக்கண்டு மாதாமனமகிழ்ந்து
வந்தவொருவீரனுக்கு வரிசையுடனன்னமிட்டு
குத்துப்பருப்புமிட்டுக் கூசாமல்நெய்வார்த்து
சுண்டல்கறிவடைகள் சகிப்பானபோசனமும்
வாழைப்பழஞ்சர்க்கரையும்வகைவகையாய்த்தானமைத்[து]
சாப்பிட்டுக்கையலம்பித் தாம்பூலந்தான்தரித்து.
பள்ளியறையிற்புகுந்து பாங்கானகட்டிலிலே

பள்ளிகொண்டுவீரயனும் பாங்காயெழுந்திருந்து
இப்படிதானும் இருக்குமந்தநாளையிலே

தோட்டியன்மகள் ருதுவானவிடத்தில் மதுரைவீரன் காவலிருந்தது.

பட்டணத்தையாளும் பரிவானதொட்டியனும்
பொம்மணநாய்க்கன்மகள் பொம்மியம்மாளென்பவள்தா
புத்தியறிந்ததின்மேல் பூவைதனைப்பொம்மணனூர் [ன்
ஊருக்குமேற்கே ஒருநாழிதூரத்தில்
பச்சைக்குடிசைகட்டிப் பண்பாயலங்கரித்து
பொம்மியம்மாளைப் பொங்கமுடன்கூட்டிவந்து
அந்தக்குடிசைதனில் அமர்ந்திருக்கச்செய்துவைத்து
மாதிகச்சின்னானை வரவழைத்துத்தானுடனே
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
காட்டானைசிங்கம் கரடிபுலிவாராமல்
கள்ளர் திருடர் கடுவிஷங்கள்தீண்டாமல்
காற்றுமழைவந்தென்று காவல்தப்பிப்போகாமல்
இருட்டுக்கருக்கலென்று ஏமாந்திருக்காமல்
முப்பதுநாளு முழித்துக்கொண்டுதானிருந்து
பைங்கிளியாடன்னைப் பத்திரமாய்க்காத்திருப்பாய்
காரும்பிள்ளாயென்று கட்டளையுமிட்டாராம்
நல்லதையாவென்று நலமுடனேமாதிகனும்
மாதிகச்சின்னானு மாளிகைக்குத்தான்வந்து

குச்சுவருமாலைகட்டிக் கொடுவாளுங்கையேந்தி
கச்சைவரிந்துகட்டிக் கட்டாரிகைப்பிடித்து
அம்புவில்லுங்கையேந்தி ஆயுதங்கள்தான்றரித்து
பொம்மியம்மாள்காவலுக்குப் போய்வாரேன்மாதிகனு
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும் [ன்
காகமணுகாமல் கருங்குருவிநாடாமல்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
இப்படியாகக் காத்துவரும்வேளையிலே
வருணபகவானும் வந்துகவிந்ததினுல்
ஈரேழுலகமெங்கும் இருள்வந்துசூழ்ந்ததினுல்
வயதுசென்றமாதிகனு மனதுநொந்துமெய்நடுங்கி
பொம்மியம்மாள்காவலுக்குப் போகக்கூடாமையினுல்
மனதிலேயெண்ணி மகனுடனேசொல்லலுற்றுன்
வீரப்பன்தான்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து
இந்தஇருட்டிலே யெப்படிபோவீரையா
பிள்ளையென்றுநானிருக்கப் பெரியவர்நீபோகலாமோ
மங்கையுடன்காவலுக்கு மகன்தானுன்போய்வாரேன்
என்றுசொல்லித்தானு மெழுந்திருந்தான்வீரையனும்
எழுந்திருந்துதான்போய் எண்ணமுற்றகாளையவன்
சலவைக்கல்மண்டபத்தில் சாமிபோல்நின்றுகொண்டு
சம்பங்கியெண்ணெயால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிர்க் கோணுமல்சிக்கறுத்து
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்த்தான்முடித்து
சிவசிவாவென்றே திருநீறணிந்துகொண்டு

சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மார்புதனில்
பஞ்சவர்னப்பட்டாடை பாங்காயலங்கரித்து
சிவந்தவுருமாலே செண்டுகட்டுப்பாவனையாய்
மாண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
கச்சைவருந்திகட்டிக் கருங்கச்சைசுங்குவிட்டு
முன்னின்றதொங்களிலே மோககன்னிஅட்சரமும்
பின்னின்றதொங்கலிலே பிர்ம்மாவினட்சரமும்
உள்ளேகபாயணிந்து உடம்பெல்லாமங்கிபூண்டு
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
பாசிபந்துதாயித்தும் பாங்காகக்கையில்கட்டி
ஆபரணமெல்லா மலங்கரித்துத்தான்வந்தான்
வட்டுதுலாங்கத்தி யித்துடனேகேடகமும்
உண்டைவில்லும்கையும் உடைவாளுந்தான்கட்டி
பாக்குடனேவெற்றிலேயும் பாங்காகத்தான்வாங்கி
மாதிகச்சின்னனை வந்துகண்டேயந்நேரம்
பொம்மியம்மாள்காவலுக்குப் போகைவிடைதாருமை
அப்படியேபோய்வா யனுதினமுங்காவல்செய்வாய் [யா
என்றுசொல்லக்கேட்டு ஏத்தமுள்ளதென்மதுரை
நடந்தான்காண்வீரையனும் நாலுதிக்குந்தானதிர
சிங்காரத்தோப்பைச் சீக்கிரமாய்த்தான்பார்க்க
அலங்காரத்தோப்பில் அச்சமுற்றுத்தான்சேர்ந்தான்
பைங்கிளியாள்தன்குடிசைப் பக்கமேபோய்ச்சேர்ந்தான்
அந்நேரவேளைதன்னிலாரணங்குமொம்மியம்மாள்[தான்
குடிசைவிட்டுவெளியில்வந்து கொப்பனவேதான்பார்த்

தென்மதுரைநிற்கிரதைக் தேன்மொழியுங்கண்டாளே
நிற்கிறதைக்கண்டு நெடுநேரம்மாய்மறந்து
ஆரோதெரியாது அர்த்தராத்திரிவேளைதன்னில்
மாதிகனல்லவென்று மாற்றானைக்காணுதென்று
ஆரடாநிற்கிறவ னஞ்சாமற்சொல்லிடுவாய்
ஆரோவனச்சொல்லி அஞ்சாதேமங்கைநீ
மாதிகச்சின்னானன்பெற்ற மைந்தன்தானென்று
நல்லதென்றுசொல்லி நடந்தாள்குடிசைக்குள்
பைங்கிளியாள்போய் படலெடுத்துச்சாத்தியபின்
கட்டிலின்மீதிருந்து கட்டளைகள்சொல்லுகிறாள்
பத்திரமாய்நீயும் படுத்திருடாவென்றுசொன்னாள்

மதுரைவீரன் பொம்மியம்மாளைச் சேருதல்.

மதுரையன்தான்கேட்டு வகையுடன்பேசலுற்றான்
போட்டதொருகட்டிலிலே போய்படுத்தாய்பெண்ணேநீ
ஒண்டியொருவனுமா யுட்கார்ந்திருப்பேனோ
மங்கையேநானும் மழையினனைகிறது
ஆண்பாவம்பொல்லாது அதட்டினால்தோஷமடி
இருட்டிலொருவனுமா யிருப்பேனோபெண்ணரசே
குடிசைக்குள்வரவழைத்தால் கோடிதர்மமுண்டுனக்கு
இவ்வார்த்தைகேட்டிருந்தவஞ்சிழையாள் சொல்லுகிறாள்
சக்கிலியைப்பையனுக்குத் தலைப்புழுகுஆடுகுதோ
வகுத்தாளம்பேசி எடுத்துரைக்கவந்தாயடா
காவல்செய்யவந்தாயோ கற்பழிக்கவந்தாயோ
என்னபினத்துகிறாய் எழுந்திருந்துபோடாநீ

கூவென்றால்கேட்டு கோடிபளைவந்துவிடும்
உந்தனையும்வெட்டி யுயிர்க்கழுவில்போட்டிடுவார்
பையலென்றபோதே பதைக்குதடியென்மனது
தலைவெட்டிபோனாலுஞ் சக்கிலிநான்விடுவதில்லை
உந்தனையும்விட்டென் னுயிர்தானும்போகாது
ஈரத்தில்நின்றால் என்னுடம்புக்காகாது
ஊந்தனுடனீயும் இசைவாகத்தான்கூடி
குடிசைக்குளெனையழைத்துக் கூடினாலுந்தனுக்கு
கோடிதருமமுண்டு கோதையேசும்மடிநீ
சக்கிலியனானாலுந் தனஞ்சயனானவடி
கன்னியேகொஞ்சநாளில் காட்டுகிறேன்சவுரியத்தை
இந்நேரவேளைதனி லிருவருமேகைகலந்து
மருவியிருவருமாய் மங்கையேபெண்மயிலே
காமவிகாரங் களையாய்வருகுதடி
மன்மதபாணம் மார்பில்வந்துரைக்குதடி
பஞ்சணைமெத்தையின்மேல் பக்கத்திடங்கொடுத்தால்
இருவருமாய்க்கூடி இருப்பமடிபெண்ணரசே
கூடியிருந்தோமானல் கோதையரேநீதானும்
சந்தனங்கஸ்தூரி தான்பூசிவாழ்ந்திருப்பாய்
பால்பழமுஞ்சர்க்கரையும் பசியாமலுண்டிருப்பாய்
வெற்றிலையும்பாக்கும் விதம்விதமாய்த்தானுகர்வாய்
ஏதேதுகேட்டாலும் எடுத்துவந்துநான்றருவேன்
மங்கையேநான்கேட்டு மனதுமுருகிலையே
கல்லுங்கரையுமடி கடலும்இறகுமடி

உன்வடிவுக்கேற்ற உத்தமனுநான்தாண்டி
எதுக்குமஞ்சாதே இளமயிலேபெண்ணங்கே
இப்படியாக இன்பமுடன்கேட்கையிலே
பேடைமயில்போல் பெண்ணணங்குகேட்டிருந்து
எண்ணுதுமெண்ணி யேங்கியமுகலுற்றாள்
ஈஸ்வரனேயென்தலையில் என்னவெழுதிவிட்டாய்
கன்னிகழியாமல் கல்யாணஞ்செய்யாமல்
சக்கிலியின்கற்பழிக்கத் தலையிலெழுதினையோ
என்றுசொல்லிகன்னியரு மேங்கிமுகம்வாடி
முத்துப்போல்கண்ணீரைமுகமெல்லாஞ்சோரவிட்டாள்
பவழம்போல்கண்ணீரைப் பக்கமெல்லாஞ்சோரவிட்டா
அழுதுமுகம்வாடி அவளிருக்குங்குடிசைக்குள் [ள்
மண்டியிட்டுத்தானுழைந்து மடிமேலுட்கார்ந்து
மங்கையரைத்தானு மார்போடேதானணைந்தான்
ஏந்திழையேயுந்தனுக்கு என்னவிசாரமடி
ஆரென்றிருக்குறாய் அருங்கிளியேபெண்மயிலே
காசிராசன்பெற்ற கருத்துள்ளவீரனடி
மகிமைதெரியாமல் மயங்கிறாய்பெண்மயிலே
என்றுசொல்லித்தானும் எடுத்தவளைக்கண்துடைக்க
மங்கையரும்பார்த்து மனமுங்குளிர்ந்தாளாம்
தெளிந்துமுகமலர்ந்து தேன்மொழியாளப்போது
கண்குளிரப்பார்த்துக் கன்னிகையுமேதுசொல்வாள்
முன்னழகும்பின்னழகும் மூவுலகிற்கிட்டாது
மார்பழகைக்கண்டால் மயங்குவார்கோடிபெண்கள்

உருமாலைகட்டழகும் உருத்திராட்சந்தன்னழகும்
சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மங்கைக்கு
புனுகுசவ்வாது பொங்கமுடன்பூசலுற்றான்
மல்லிகைப்பூசண்பகப்பூ வரிசையாய்த்தான்முடித்தான்
உத்தரியந்தானெடுத்து உத்தமிமேல்தான்றறித்தான்
மங்கையருமப்போது மனமகிழ்ந்துகட்டிலின்மேல்
என்னைவலதழிக்க எத்தனைநாள்காத்திருந்தாய்
மகாதேவரருளினால் மண்பிடித்தவேளையிலே
மன்னவனேஎந்தனுக்கு வளர்ந்தீரோபூமிதனில் [ம்
என்றுசொல்லிதானகத்தாள் ஏர்க்கையுள்ளகன்னிகையு
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகமுன்புவைத்தாள்
பாக்கிலையுந்தாமருந்தி பரிந்துவிளையாடிக்
காமவிகாரங் கண்ணைமறைத்ததப்போ
மன்மதபாணம் மார்புருகிப்போகையிலே
தோகையணிந்த துகிலாடைதான்களிந்து
மங்கையரைத்தானனிந்தான் மாணிக்கக்கையாலே
கட்டியணைத்தான் கனிவாயைமுத்தமிட்டான்
முகத்தோடுமுகம்வைத்து முத்தமிட்டாரிருவருமாய்
கந்தருடன்வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
பார்வதியாடன்னுடனே பரமசிவன்சேர்ந்ததுபோல்
கூடிமகிழ்ந்து குலாவிவிளையாடி
மதுரைம்காவீரன் மங்கையுடன்தான்சேர்ந்தான்
இப்படியாக யிருந்துவிளையாடினபின்
கட்டில்விட்டுத்தா னிரங்கிக கன்னிகையுமப்போது

புருஷனேதெய்வமென்று பொற்கொடியுந்தானினைந்து
தென்மதுரைவீரனுக்குத் தெண்டனிட்டுநிற்கையிலே
மன்னவனுமப்போது மங்கையரைத்தானெடுத்து
காலில்விழுந்த காரணத்தைக்கேட்கலுற்றார்
பெண்ணரசிவாய்திறந்து பிரியமுடன்சொல்லலுற்றாள்
மானிடவர்தானோ மகாதேவர்நீர்தானோ
எவ்வுலகராசாவோ எல்பானார்தன்மகனோ
ஆர்பெற்றகண்மணியோ ஆண்டவனேசேதிசொல்லும்
மாதிகன்வீட்டில்வந்த வகைதனைச்சொல்லுமென்றாள்
தாய்தகப்பன்பேருந் தனஞ்செயனேசொல்லுமென்றாள்
மதுரையான்வந்தவகை மங்கையேசொல்லுகிறேன்
கைலாசநாதர் கடாட்சத்தின்தன்னாலே
காசிமகாராஜனுக்குக்கண்மணியாய்நான்பிறந்தேன்
மாலையுடன்பிறந்தனென் றுவனத்திலேபோட்டுவிட்டார்
வனத்திலிருந்தயென்னை மாதகியெடுத்துவந்தாள்
சக்கிலியன்வீட்டில் வளர்ந்தனடிதையலரே
இந்தமட்டுந்தான்சேதி இனியொன் றுநானறியேன்
என்றுசொன்னசொற்கேட் டினிதாய்மனமகிழ்ந்தாள்
பொழுதுவிடியுதுநாண் போய்பிழைபு மன்னவனே
நாளைப்பொழுதிலுன்னுகரிகம்பேசுவீர்காண்
இப்படித்தானு மிருக்குமந்தவேளைதனில்
கங்குல்விடிந்து கதிரோனும்வந்துதித்தான்
தேன்மொழியாள்குடிசைவிட்டுச் சீக்கிரமாய்வெளியில்
வந்து, கிழக்குமுகமாயிருக்கும் கேணியிடம்போய்க்

கால்கைமுகஞ்சுத்திசெய்து கனிவாயுங்கொப்பளித்து
சிவசிவாவென்றே திருநீறுதானுமிட்டு
அரகராவென்றுசொல்லி யையனையுந்தான்தொழுது
கோதைமயிலனையாள் குடிசைக்குட்டானுழைந்தாள்
மதுரைவீரன்தானும் மாதிகன்வீடேபோனன்
மாதிகனுமோடிவந்து மைந்தனைத்தான்தழுவி
இந்நேரமென்னசெய்தா யெந்தனதுகண்மணியே
மழையில்நனைந்ததினல் மறந்துநான் தூங்கிவிட்டேன்
நல்லதென்றுகூட்டிப்போய் நலமுள்ளமாதிகனும்
மங்கையரேபெண்ணே மைந்தனுக்குஅன்னமிடு
மாதாமனமகிழ்ந்து வட்டில்விளக்கில்வைத்து
சம்பாஅரிசிசமைத்த சாதம்படைத்து
தயிரெடுத்துவாரத்து தயவாய்ப்புசியுமென்ருள்
வற்றல்வடகம் வகையுடனேயூறுகாய்
கூட்டியமுதுண்டான் குணமுள்ளவீரனுமே
உண்டுபசியாறி உத்தமனும்வீற்றிருந்தார்
கங்குல்வருமுன்னே கதிரோனும்போய்மறைந்தான்
இன்றையகாவலுக்கு என்மகனேபோய்வருவாய்
நல்லதென்றுவீரனும் நடந்தானேயப்போது

(மதுரைவீரன் பொம்மியம்மாளுக்குத் தாலி தரித்தல்.)

பொன்னுபரணமெல்லாம் பூட்டியலங்கரித்து
ஆயுதமெல்லாமெடுத்து அரிவாளுங்கைபிடித்து
பார்த்தபேர்மோகிக்கப் பஞ்சவர்னப்பொட்டுமிட்டு
மங்கைக்குத்தான்தரிக்க மங்கிலியங்கைக்கொண்டு

நாடிகுடிசைதனில் நடந்தானேவீரையனும்
மங்கைக்குடிசைதன்னில் மன்னவனும்வந்துநின்ருன்
காரிழையுமப்போது கண்டுமனமகிழ்ந்தாள்
ஆனாலும்பெண்ணரசே யன்பாகசொல்லுகிறேன்
மங்கிலியங்கட்டாமல் மாதேயுனையணைந்தேன்
மங்கிலியஞ்சூட்ட மகிழ்ச்சியாய்வந்தனடி
இந்தசொற்கேட்டு ஏந்திழையாளப்போது
கழுத்திலேமங்கிலியங் கண்டதேயுண்டானல்
அம்மான்மார்கூடி யறுத்துத்துசந்தொடுப்பார்
என்தகப்பன்வந்து இறக்கமடித்திடுவார்
இப்படியாக ஏந்திழையுஞ்சொல்லலுற்ருள்
ஏதுக்குமஞ்சாதே இளங்கொடியேபெண்மயிலே
ஆதிசிவன்பிர்ம்மா ஆயனுடன்பார்வதியும்
முப்பத்துமுக்கோடி தேவர்களுமுன்னிற்க
அரனர்திருமகனு மானைமுகப்பிள்ளையரும்
எல்லோரும்பார்த்திருக்க இந்தசிறுதாலிதனை
மஞ்சள்சரட்டில் வண்மையாய்த்தான்கோர்த்து
சாணமெடுத்துவந்து சதுரமாய்தான்முழுகி
பிள்ளையாரைப்பிடித்த பெட்புடனேதானிறுத்தி
அருகுபிடிங்கிவந்து அன்பாய்விநாயகர்க்கு
புட்பங்கள்தூவியல்லோ போற்றிமிகத்துதித்து
பாதத்தின்முன்பாகப் பாங்கானதாலிதன்னை
வைத்துஇருவோரும் வணங்கியேதெண்டனிட்டு
சாம்பிராணி தூபம் சதிராகத்தான்கொடுத்து

தேவர்களப்போ சிறப்பாகப்பார்த்திருந்தார்
அந்தநல்லவேளையிலே ஆண்சிங்கவீரையனும்
சரட்டுடனேதாலிதன்னைச் சாங்கமாய்தானெடுத்து
தேவர்களைநோக்கித் தெண்டனிட்டுவீரையனும்
சிவசிவாவென்றுசொல்லித் திருமங்கிலியந்தன்னை
தோகைநல்லாள்தன்கழுத்திற் சூட்டினனப்போது
அந்நேரந்தேவர்களு மலங்காரமாகவேதான்
பூமாரியல்லோ பொழிந்தார்களக்கணமே
ஆணிமுத்துவீரையனு மாரணங்குபொம்மியரும்
திட்டமுடனெழுந்து தீர்க்கமுடன்தேவர்களை
அடிபணிந்துதெண்டனிட்டு அடைவுடனேநின்றார்கள்
ஆசீர்வாதஞ்செய்து யாவரும்வரமளித்தார்
பொன்னுலகவாசலிலே போய்புகுந்தார்தேவரெல்லாம்
ஆணிமுத்துவீரையனை யாரிழையாள்தான்பார்த்து
ஆதிசிவன்கர்த்தா வமர்ந்தசபைதானறிய
மங்கிலியத்தைத்தரித்த மைத்துனரேவாருமென்று
கட்டிலிலிருவருமாய்க் கைகோர்த்துதாமிருந்து
சிரித்துவிளையாடித் தேன்மொழியைத்தானணைந்தார்
அணைந்துவிளையாடி யாவலெல்லாந்தீர்த்தார்கள்
தீராதவாசையெல்லாந் தீர்த்துஇருவருமாய்
வாருங்காண்மைத்துனரே வார்த்தையதுகேளுமென்று
ள், முப்பதுநாளு முடிந்ததுகாண்நாளையுடன்
நாளைக்குஇக்குடிசை நலமாகத்தான்பிடுங்கி
மாளிக்குத்தானழைக்க வருவார்காண் என்தகப்பன்

உன்னைவிட்டுநான்பிரிந்து உகந்துஇருப்பேனே
இருவருமாய்க்கூடி இனிதாய்விளையாட
என்றைக்குத்தானமையும் ஏந்தலேசொல்லுமென்றாள்
நாளைக்கிழமைக்கு நான்வருவேனென்றுசொன்னான்
நாளைப்பொழுது நலமாகக்காண்பீர்காண்
அதின்பிறகுஎன்னையல்லோ யார்பார்க்கப்போகிறார்கள்
என்னைத்தவிர எவளுனக்குமாகாதோ
தேசத்தில்வேறொருபெண் சிக்காதோதேசிகனே
மண்டலத்தில்நான்தானே மற்றொருபெண்கிட்டாதோ
என்குறிஞ்சிக்கோட்டைக்கு ஏிதமாகவந்தீரென்றால்
கோட்டைக்குறிக்காரர் கொத்தளத்துச்சேவகரும்
மன்னவனேஉன்னைவழியிடத்தான்போகிறாரோ
பத்துதலைவாசலுக்கும் பத்துலட்சம்கோடிமன்னர்
தொட்டியர்கள்காவல் துடுக்காயிருக்குமங்கே
வந்தாலுமும்மை வலியுள்ளதொட்டியர்கள்
கள்ளனென்றுதான்பிடித்துக் கைகாலைவாங்கிடுவார்
உயிர்க்கழுவில்போட்டு உன்தலையைவெட்டிவைப்பார்
இந்தபடிக்காக ஏத்தமுள்ளதொட்டியர்கள்
பொல்லாதவண்டன் போக்கிரிகாணென்தகப்பன்
இப்படிஎல்லா மிகழ்ச்சியாய்ச்சொன்னேனென்னு
மன்னவனேநீதானும் மனவருத்தங்கொள்ளாதே
நடக்கும்வழிவகைகள் நானறிந்துசொன்னேன்காண்
என்னைமறவாமல் ஈடேற்றவேணுமென்றாள்
புண்ணியனேயும்மைவிட்டு பொம்மியாள்நான்மறவேன்

என்றுசொல்லிப்பொம்மியரும் ஏங்கிமுகம்வாடி
என்னையும்விட்டு இருப்பீரோபூமியிலே
கண்ணீரும்விட்டழுது கலங்கினாள்பொம்மியரும்
கண்ணீர்தனைத்துடைத்துக் காவலனுமேதுசொல்வான்
உன்னைநான்கொண்டு ஊர்வழியேபோவனடி
இருவரும்போய்ப்பிழைப்போம் ஏத்தமுள்ளபெண்ணா
சே, தேறுதலைச்சொல்லித் தென்னவனுந்தானடந்தான்
அந்தவொருவேளையிலே யானதொருமாதிகனும்
மைந்தனைத்தான்பார்த்து மாதிகனுமப்போது
முப்பதுநாளு முடிந்ததுஇப்போது
ஆகையினாலிப்போது ஆனதொருபொம்மியர்க்கு
காலுக்கிசைந்ததொரு கனத்தமிதியடியும்
மைந்தனேயுன்கையால் வளமாகச்செய்வதற்கு
மிதியடிக்கானதொரு வேணவகைரத்தினங்கள்
தங்கத்தாற்சரிகைகளுந் தனிவயிரமுத்துகளும்
பொம்மணநாய்க்கர் புதல்விக்கிவேணுமென்று
மிதியடியைத்தைக்க விரைவாகயென்கையில்
தந்தார்காண்ரத்தினத்தைத் தயவாகநீயெடுத்து
வாருகள்மேலே வகையாகத்தான்சமைத்து
திட்டமுடனீயுஞ் சீராகவையுமைந்தா
அந்தசொற்கேட்டு ஆணிமுத்துவீரையனும்
சந்தோஷங்கொண்டு தானெழுந்து அந்நேரம்

ஆட்டுகடாசர்மங் கட்டழகனுரெடுத்து
அட்டைக்குவளமான அட்டையுந்தான்சேர்த்து
அதற்கேற்றமேல்வாறு அடைவாகத்தானறுத்து
ஒருநாழிகைக்குள்ளே யுச்சிதமாமிதியடியும்
கட்டியங்கேதானெடுத்து காரணனுமப்போது
தகப்பன்தனையழைத்துத் தான்கொடுத்தான்வீரையனு
ம், பார்த்துமனமகிழ்ந்து பாலகனைக்கொண்டாடி
மாதிகனும்வாங்கி மனமகிழ்ந்துவைத்திருந்தான்

பொம்மியம்மாளைவீட்டிற்கழைத்துக்கொள்ளல்.

பொழுதுவிடிந்தபின்பு பொம்மணநாய்க்கனுமே
கூட்டத்துடனே குடிசைக்குத்தான்வந்து
குடிசைபிடுங்கி கொளுத்திவிட்டபிற்பாடு
பொம்மியம்மாள்தன்னை பொங்கமுடன்நீராட்டி
கூறையுடுத்திக் கோர்வைபணிபூட்டி
கொப்பிட்டுவாளியிட்டுக் குந்தளப்பொன்னோலையிட்டு
கருங்குருவிவாலதுபோல் கண்ணிற்குமையெழுதி
நெற்றியிற்றிலதமதை நேராகத்தானுமிட்டு
உன்கழுத்துத்தாலி யுயர்த்தியுள்ளகல்விழைத்து
கட்டுவர்க்கந்தன்னாலே கழுத்திற்சரமணிந்து
மோகனமாலை முத்தாபரணமின்ன
மார்பில்பதக்கம் வகையுடனே தானணிந்து

கடகம்பவளம் கைவளையல்தானணிந்து
பத்துவிரலுக்கும் பசும்பொன்னேற்காலாழி
இடுப்பிலொட்டியாணம் இசைவாகத்தான்பூட்டி
காலாழிபீலாழி கனத்தசிலம்பணிந்து
பாடகந்தண்டை பாதசரம்பூட்டி
அந்தநல்லவேளையிலேயானதொருமாதிகனும்
மிதியடியைத்தானெடுத்து விரைவாககொண்டுவந்தான்
அந்ததொருபொம்மணனும் அன்பாய்மிதியடியை
பொம்மியம்மாளுக்குப்புகழ்ச்சியாய்த்தான்கொடுத்தார்
மிதியடியைத்தான்பார்த்து வேலனையகண்ணாளும்
மதுரைவேலையென்று மனங்குளிர்ந்தாளப்போது
தொட்டியசக்கிலியர் திருசாககொம்பூத
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
எருதுமேல்நகார் எட்டுதிசையதிர
பிள்ளாங்குழலூதப் பேரிகையடித்துவர
நாகசுரமேளம் நாட்டியங்களாடிவர
பதினெட்டுமேளம் பாங்குடனேவாசித்து
வெடிசத்தமெங்கும் வேணபடிதானதிர
வாராளாம்பொம்மியம்மாள் வர்னமணிமாளிகைக்குள்
ஆலாத்திசுற்றும்பெண்கள் அன்னம்போல்நடந்துவந்து
பொம்மியம்மாள்தனக்குப் பொருந்ததிருஷ்ட்டிகழிக்க

முத்தாலேஆலாத்தி மூவாயிரங்கோடி
மாணிக்கஆலாத்தி வகைவகைபாய்த்தாளெடுத்து
திருட்டிகழித்தார் தீங்கெல்லாவிட்டோட
கட்டியங்கள்கூறக் கவரிபணிவீச
மங்கைநல்லாள்பொம்மியரு மாளிகையினுட்புகுந்தான்
அந்நேரவேளையிலே யானதொருபொம்மணனும்
தையனல்லாளுக்குச் சடங்குசெய்யவேண்டுமென்று
வேதப்பிராமணரை விதியுடனேதானழைத்து
நல்லதினந்தானென்று நன்றாகப்பாருமென்றான்
சித்திரைமாதஞ் சிறந்தசிம்பலக்கினத்தில்
நல்லவேளையென்று நாலுபக்கங்கால்நாட்டி
சந்தனக்கால்நாட்டிச் சதுர்முகமுங்கால்நாட்டி
பத்தரைமாற்றும் பசும்பொன்விரைபரப்பி
செண்பகப்பூவரும்பால் சிறக்கவேமாலைகட்டி
மெல்லிநல்லாள்தானிருக்கும் மேல்கட்டுத்தொங்கவிட்டு
பச்சைக்கிளியும் பசும்பொன்கவசமிட்டு
தூணுக்குத்தூணில் தூங்காவிளக்கெரிய
குத்துவிளக்கெரிய குடவிளக்குநின்றெரிய
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
எக்காளமூத எங்குங்கிடுகிடென
பாளயப்பட்டிலுள்ள பரிசனங்களத்தனையும்
துரைகள்துரைமக்கள் துரைராசமன்னவரும்
மங்கிலியப்பெண்கள் மங்கையர்கள்கூட்டமுடன்
மாணிக்கமணவரையில் மங்கைதனைக்கூட்டிவந்து

வச்சிரத்தால்முக்காலி வரிசையாய்த்தான்போட்டு
பொம்மியரைக்கொண்டுவந்து பொங்கமுடனிறுத்தி
சாத்திரஞ்சொன்னபடி சதிராகத்தான்முடித்து
அன்னமாம்பொம்மிதனை யரண்மனைக்குக்கொண்டுவந்
வந்தவுறன்முறைக்குவரிசையாய்ப்பொம்மணனும் [தார்
சந்தனங்கஸ்தூரி தான்பூசியெல்லோர்க்கும்
பரிவுடனேதானும் பாக்கிலையுந்தான்கொடுத்தார்

(விருந்திடல்.)

விருந்தங்களித்தார்கள் விகசிகமாய்த்தொட்டியர்க்கு
ஆயிரங்கலச்சம்பா அடைவுடனேதான்வடித்து
பதின்கலப்பருப்பு பாங்குடனேதான்சமைத்து
வாழைக்காய்பொரியல் வழுதலங்காய்புளிச்சல்சமையல்
பச்கடியில்நூறுவகை பாற்குழம்புந்தான்சமைத்தார்
மோர்குழம்புஆமவடை முருங்கைப்பூகூட்டமுது
கீரையில்பத்துவிதம் கிரமமாய்த்தான்சமைத்து
பலவகைப்பதார்த்தங்கள் பண்பாகத்தான்சமைத்து
அதிரசம்பேணி அதிசயமாகச்சமைத்து
போளிசுகியன பொங்கமுடன்தான்செய்து
இலட்டுசிலேப்பி இலட்சணமாகச்செய்து
காராசேவும்பூந்தி கனத்தகற்கண்டுடனே
சர்க்கரையினூற்பதுமை சாங்கமுடன்தான்செய்து
வடையப்பளமும் வகையாகத்தான்செய்து
இட்டளிதோசை யினிப்புள்ளகாரமுடன்

அன்பாகத்தான்செய்து அளவில்பலகாரமுடன்
வாழைபலாக்கினியும் வண்மையுள்ளமாங்கனியும்
தேனுடனேசர்க்கரையும் தெவிட்டவேதான்போட்டு
புத்துருக்குநெய்யும் பொங்கமுடன் தான்வார்த்து
பால்விட்டுப்பாயசமும் பத்துவிதந்தான்செய்ய
இத்துடனேகூட ஏற்றகறிவகைகள்
வேணபடிசெய்து விதம்விதமாய்த்தானமைத்து
பந்திபரிமாறிப் பாங்காய்விசாரித்து
உறன்முறையோரெல்லோரும் உண்டுபசியாறி
கைகாலலம்பிக் கனிவாயைக்கொப்பளித்து
வந்துவுட்காந்தார் வண்மையுள்ளபந்தலிலே
சந்தனமும்புட்பந் தயவாலங்கரித்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகவேயளித்தார்
வால்மிளகுஏலக்காய் வண்மையுள்ளசாதிக்காய்
சாபத்திரிகிராம்புடனே சம்பிரமாய்த்தான்கொடுத்து
அருகிலிருந்து அனைவரையிம்பூசித்தார்
இப்படியாக விருக்குமந்தவேளையிலே
மாதிகச்சின்னனும் வண்மையுள்ளவீரனுமே
சாதம்கறிவாங்கத் தாம்வாராரன்னேரம்
பொம்மணநாயகரும் பொறுமையுடனேபார்த்து
ஆரடிதாதிகளே அன்னம்படையுமென்றார்
படையுமென்றசத்தம் பைங்கிளிமார்தான்கேட்டு
ஆரென்றுசொல்லி யலறியெழுந்திருந்தாள்
தாதியும்போது கக்கிலியனென்றுசொன்னான்

சாதங்கரியுடனே தட்டில்பரிமாறி
கொண்டுவாவென்று கூறலுற்றாளப்போது
நாதியருமுன்னடக்கத் தயைலருங்கூடவந்து
மாதியர்க்கும்பெண்ணரசி வாரியமுதிட்டாள்
மதுரைநல்வீரையனை மங்கையருந்தான்பார்த்தாள்
நல்லதென்றுசொல்லி நலமாயெழுந்திருந்தான்
தகப்பனுடன்கூட தன்மனைக்குப்போய்ச்சேர்ந்து
ராத்திரிவீரையனுமே நல்லணங்கைத்தானினைத்து
மைந்தனென்றுதான்வளர்த்த மாதிகைக்குக்கூறுமல்
பதினைந்துநாழிகையில் பள்ளியறையைவிட்டு
சர்வாபரணமெல்லாம் தானணிந்தானப்போது
மாளிகையைவிட்டு வாரான்காணுவலுடன்
பொம்மியர்மேலாசைகொண்டு புறப்பட்டான்வீரனுமே
கொள்ளைகொண்டவீரனுமே கோட்டைக்குமுன்வந்து
அனுமார்லகுவெடுத்து அதிரக்குதித்தான்காண்
பத்துகட்டுவாசலைப் பாங்காகத்தான்கடந்து
பொம்மியர்க்குக்காவலாய்ப் பொம்மணனுமப்போது
தலைவாசல்முன்னே சப்பரமஞ்சக்கட்டிலின்மேல்
உருவினகத்தியுட னுறங்கினான்பொம்மணனும்
இத்தனைகட்டுமெட்டா யிருந்துநம்மையென்னசெய்வான்
என்றுசொல்லித்தான்சிரித்து ஏற்றமுள்ளவீரையனும்
ஈயைப்போல்வடிவெடுத்து இறப்பிலேபோய் நுழைந்தா
ன், மெள்ள நுழைந்துபோய் மெல்லியரைத்தானெழுப்பி
தேன்மொழியாள்பொம்மி திடுக்கென்றெழுந்திருந்து

கணவனைக்கண்டவுடன் கன்னியரும்பூரித்தாள்
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
இருவருந்தான்தழுவி யிருந்தார்கள்பஞ்சணைமேல்
கோட்டைத்தலைவாசல் கொத்தளமுந்தான்கடந்து
அங்கங்கேகாவல் ஆனதொருசேவகரும்
தொட்டியர்காவல் துடுக்கர்தங்காவலங்கே
மாளிகைவாசலிலே மைந்தனுமென்தகப்பன்
உருவினகத்தியுடன் உன்மாமன்தானிருக்க
இந்தகடிகாவலிலே ஏன்வந்தீர்மன்னவனே
கேளடிபெண்மயிலே கிரீடிக்கிறதற்காக
அரண்மனையில்நீயிருந்து அவிடத்தில்நானிருந்தால்
ஏகாந்தமெங்கேயடி இருவருக்கும்பெண்ணரசே

மதுரைவீரனும் பொம்மியம்மாளும்

திருச்சிராப்பள்ளிக்குப்புறப்படல்.

வாருமடிபெண்ணே வையகத்திற்போய்ப்பிழைப்போம்
தெற்கேயொருகோட்டை திருச்சிராப்பள்ளியென்று
இருக்குதடிபெண்மயிலே யிருவரும்போவமென்றார்
நல்லதென்றுசொல்லி நயமுள்ளமங்கையரும்
மாணிக்கப்பெட்டியை வகையுடனேதான்திறந்து
செலவுக்காயிரம்பொன் சீக்கிரமாய்த்தானெடுத்து
பட்டுபட்டாவளிகள் பாங்குடனேதானெடுத்து
ஒற்றைக்காலகூடாரம் ஒக்கவேதானெடுத்து
அத்தனையுந்தானெடுத்து ஆரணங்குமன்னவனும்

போகவேணுமென்றுசொல்லிப் புரப்பட்டாரிருவருமா
ய், கதவைத்திறந்துடனே கன்னிகையுங்காளையரும்
மாளிகையைவிட்டு தலைவாசலிலேவந்துநின்று
திறந்தகதவைச் சேரவேதான்மூடி
காளிதனையழைத்துக் காவலிருக்கச்செய்து
தாப்பாளும்பூட்டுந் தப்பாமல்பூட்டிவிடு
என்றுசொல்லிவீரையனும் இதவாகநீறெடுத்து
மந்திரித்துப்போட்டு மன்னவனுமப்போது
பொம்மணனென்னும் புரவிதனையவிழ்த்து
தங்கக்கடிவாளந் தாராளமாய்ப்புட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்னாலசீனிகட்டி
கூடாரத்தைமடித்துக் குதிரையின்மேல்போட்டு
பட்டாபெருங்கத்தி பரங்குடனேதானெடுத்து
பொன்புரவிமேலே பொம்மியரைத்தூக்கிவைத்து
கடிவாளுங்கைபிடித்துக் காரணனுமேறலுற்றான்
கோட்டைகடந்தார்கள் கொள்ளைகொண்டவீரையனும்
கொல்லைமலைகடந்து கோனேரியாறுவிட்டு
ஆமூர்வழியாக ஆற்றில்வந்துதானிறங்கி
நாட்டினார்கூடாரம் நட்டாற்றில்வீரையனும்
பலகாரஞ்சாப்பிட்டு பள்ளிகொண்டாரிருவருமாய்
ஏகாந்தம்பேசி இருக்குமந்தவேளையிலே
பொழுதுவிடிந்தது பெம்மணனுமப்போது
பட்டத்துப்புரவியையும் பட்டத்துக்கத்தியையும்
காணாததினாலே கலக்கமுற்றுஅந்நேரம்

பொம்மியம்மாளைப் புகழ்ச்சியாய்க்கூப்பிட்டுப் [வை
பேசவில்லையென்றுசொல்லிப் பேர்த்தெரிந்தானக்கத
பார்த்துமகளில்லையென்று பதறிவிழுந்தான்காண்
பொம்மியரைக்காணேமென்று புலம்பிவெளியேவந்து
வேதியர்கள்சொன்னதெல்லாம் மெய்யாச்சுதென்றுசொ
ல்லி, பட்டணத்திலுள்ள பரிசெனங்களத்தனையும்
திக்குத்திசைகளெல்லாந் தேடிதிரிகையிலே
மாதிகச்சின்னனும் மகனையுங்காணேமென்று
எதிராகவந்தான் எண்ணமற்றசக்கிலியன்
எல்லோரும்பார்க்க எடுத்துரைத்தாரந்நேரம் [ன்
மாதிகன்மகனுமிப்போ மங்கையரைக்கொண்டுசென்று
என்றுசொல்லிநாய்க்கருக்கு எடுத்துரைத்தாரந்நேரம்

மதுரைவீரன்மேல் பொம்மணன்
படையெடுத்தல்.

சேனைகளைக்கூட்டித் திரளாகப்போவதற்குப்
பதினாயிரம்வெடிக்காரர் பாங்குடனேகூட்டமிட்டார்
வளைதடிகள்சக்கரங்கள் வகையுள்ளராணிக்கள்
சேனைகளெல்லாந் திரளாகத்தான்கூட்டி
அந்தநல்லவேளையிலே ஆனதொருபொம்மணனும்
வாகுவலயமும் வளைதடிசக்கரமும்
எறியம்புநெறியம்பு யீட்டியுங்கைபிடித்து
வேணவிருதுகளும் விதவிதமாய்த்தானெடுத்து
பஞ்சகல்யாணப்புரவி பாங்காகக்கொண்டுவந்தான்

பொம்மணநாய்க்கர் புரவிதனிலேறி
தலையாரிமுன்போகத் தனிப்பரியும்பின்தொடர்ந்து
சேனைவருவதினால் செந்தூள்பறக்குதிப்போ
தப்பட்டைக்கொம்பு தவில்முரசுதானமுழங்க
யானைமேல்பேரிகை யதிர்ந்துமுழங்கிவர
தென்றிசையைநோக்கிச் சீக்கிரமாய்வருகுதப்போ
வழியிலெதிராக வருவோரைக்கேட்கலுற்றார்
ஒற்றைக்குதிரை ஒருபெண்ணுமாண்பிள்ளை
கண்டாயோஇவ்வழியில் கண்மணியேதம்பியரே
அப்போதுஆட்டிடையன் அவன்கண்டசேதிதனை
ஆருமையாசுவாமி வந்தவகைசொல்லுகிறேன்
கருங்கால்வழியாகக் கண்டேனொருகுதிரை
குதிரையின்மேலொரு கோதையருமன்னவனும்
இவர்கள்ரண்டுபேரும் இதமாகப்போனார்கள்
அந்தநல்லசேதிதனை அடவாகத்தான்கேட்டு
பொம்மணனும்போது போகிறான்வேகமுடன்
கருந்தூளுஞ்செந்தூளுங் கலந்துபறக்குமப்போ
காவேரியாற்றில் கண்டானேகூடாம்
அதிலிறங்கிச்சேனை அலைகொட்டிருக்கிறதை
கூடாரத்திலிருந்து கோதையரும்வெளியில்வந்து
வடக்குமுகம்பார்த்தாள் வருகின்றசேனையைத்தான்
அலறியேபோய்விழுந்தாள் ஆணிமுத்துவீரன்மேல்
என்னடிபெண்ணேயென்றுஎழுந்திருந்துவெளியில்வந்து
பார்த்தார்வடக்குமுகம் பரந்துவருஞ்சேனைதனை

கண்டு அதைவீரையனுங் கன்னிடமனக்தோற்ற
கூடாரத்தின்மேல் கொள்ளைகொள்ளையென்றுசொல்லி
வந்துநிறைந்தார்கள் வந்தசேனையத்தனையும்
பதினாயிரம்பேர்கள் பாங்குடனே அம்புதொட்டு
கூவியதுபோல கொடியம்புதான்றொடுத்து
வெட்டவேணுமென்று வீரன்மேல்வாரார்கள்

(மதுரைவீரன் சண்டைக்குப்போகுதல்.)

கண்டுமந்தவீரையனுங் கடுங்கோபந்தானாகி
மீசைதுடிக்குதப்போ வெகுகோபங்கொள்ளுதப்போ
ஏறினார்குதிரையின்மேல் எடுத்தார்பெரியகத்தி
மன்னவனேயுங்கள் மாமனாருத்தனையும்
வெட்டாமல்விட்டுவரவேணுமென்றுதெண்டனிட்டாள்
பைங்கிளியே பெண்மயிலே படுகளத்தில்ஒப்பாரி
உண்டோயித்தேசத்தில் உண்மையாகச்சொல்லவந்தாய்
என்றுசொல்லிவீரனுந்தான் எதிராளிசேனையிலே
யானைத்திரளதனில் ஆளிவந்துபாய்ந்ததுபோல்
சேனைத்தளத்தில் சிறுவேங்கைபாய்ந்ததுபோல்
வந்துவளைத்தானும் மட்டற்றசேனைதனில்
சேனைகளெல்லாந் திரளாகவோடியங்கே
மாண்டுமடிகிறது மன்னனதுசேனையெல்லாம்
முன்வீச்சுக்காயிரம்பேர் முனைவீச்சுக்காயிரம்பேர்
இறந்துமடியுதப்போ எண்ணிறந்தசேனையெல்லாம்
பொம்மியால்நம்முயிர்தான் போகுதென்றுசொல்வாரு
என்றுபுலம்பி யிறந்துமடியுதப்போ [ம்

புஷ்பமாய்வந்து பொழியுதுகாணுண்டவன்மேல்
தொடாந்துபோய்வீரன் துடுக்கர்படையெல்லாம்
துண்டதுண்டமாக துணித்தாராமப்போது
சாகிப்சலாமென்று தான்விழுந்தார்கோடிபடை
திரிச்சிராப்பள்ளி தேசத்தையாளுகின்ற
விசையரங்கசொக்கலிங்க வேந்தனதுராணுகளும்
கோட்டைக்கதவடைத்து கொத்தளத்துமேலிருந்து
வேடிக்கைபார்க்கிறார்கள் வேந்தன்படைத்தளமும்
சேனைத்தளங்களெல்லாஞ் சேதமாய்ப்போச்சுதென்று
மனதுகலங்கியப்போ மன்னவனுமேதுசொல்வான்
சக்கிலியன்தானுமிப்போ தலையறுத்தான்சேனையது
கூட்டம்படைகளெல்லாங் கொன்றுகருவறுத்தான்
நாம்போய்விழுந்து நறுக்குவோம்சக்கிலியை
என்றுநினைத்து எத்தமுள்ளபொம்மணனும்
புரவிமேலேறிப் புறப்பட்டான்சக்கிலியன்
எதிர்கொண்டுவந்த அண்ணமுற்றமாமனைத்தான்
பார்த்துமங்கேபறக்கடித்துப் பதறிபோய்தான்விழுந்து
மாமனென்றுபாராமல் வாளாளேவீசிவிட்டான்
மாமன்விழுந்தபின்பு மதுரைமகரமுனியும்
தொட்டியப்பயல்களைத்தான் துரத்திக்கருவறுத்தான்
கத்திபரிசெல்லாங் காவேரியிற்றுனலம்பி
கொள்ளைகொண்டான்வீரையனு கூடாரந்தானேக்கி
குலுங்கநடைநடந்து குஞ்சிரிப்புகொண்டுவரும்
அடுத்தாரைக்காக்கும் ஆணிமுத்துவீரனுமே

வர்னமணிக்கூடாரம் வந்திரங்கும்வேளேயிலே
ஏந்திழையுமப்போது என்றகப்பனெங்கேயென்றாள்
உன்தகப்பன்தானும் ஒக்கமடித்தாண்டி
என்றுசொல்லக்கேட்டு ஏற்றமுள்ளபொம்மியரும்
அலறியேபோய்விழுந்தா ளானதொருபடுகளத்தில்
பொம்மணன்மேல்விழுந்து புலம்பியழுகலுற்றாள்
என்னாலேஉங்களுயிர் எமலோகஞ்சேர்ந்ததென்று
பாவிமகளாலே படுகளத்தில் மடிந்தீரோ
என்னைவிட்டுநீங்கள் இருந்தரசு ஆளாமல்
சேனைத்தளத்துடனே சீக்கிரமாயாற்றில்வந்து
மடிந்தீரோமன்னவனே மகாசேனையத்தனேயும்
என்றுபுலம்பி ஏங்கியழுகலுத்றாள்
மங்கையரைத்தானெடுத்து மணிமதுரைவீரனுமே
அழுகிறதைத்தானமர்த்தி அந்நேரம்வீரனுமே
திரிச்சிராப்பள்ளியில்போய்ச் சீக்கிரமாய்க்கட்டைகொண்
சந்தனக்கட்டையின்மேல் சதுராஎடுத்துவைத்து [டு
நீர்க்கடனுந்தீக்கடனுந் நீதியுள்ளமாமனுக்கு
வரிசையுடனேமுடித்து வளமயிலும்வீரனுந்தான்
காவேரிதீர்த்தத்தில் கனமாகத்தான்குளித்து
மங்கையரும்வீரையனும் வந்தார்கள்கூடாரம்
சாதம்கறிவகைகள் சமைத்தாரே அந்நேரம்
படைத்தசாதத்தைப் பரிவாகவீரனுண்டான்
பைங்கிளியைப்பார்த்துப்பசியாறும்பெண்ணேயென்றான்
உண்டுபசியாறி உத்தமியாள்பொம்மியரும்

இருவருங்கூடி ஏகாந்தமாயிருந்து
பாக்கிலேகாமருந்திப் பரிந்துவிளையாடி
என்னடிபொம்மியேநாம் இங்கிருக்கக்காரணமேன்
கூடாரந்தான்பிடுங்கிக் கோட்டைக்குப்போவமென்று
பொம்மியரும்வீரனுந்தான் புறவிதனிலேறி
திரிச்சிராப்பள்ளிக்குச் சீக்கிரமாய்ப்போகையிலே

மதுரைவீரன் விசையரங்கனிடத்தில்
சம்பளத்துக்குப் போயிருத்தல்.

கோட்டைத்தலைவாசல் குறிக்காரர்தாமறிந்து
எந்தவூரென்று இதமாகத்தான்கேட்டார்
வடக்கேயிருந்து வருகிறோமென்றுசொல்லி
சேவகமில்லாமல் செம்மையாயிங்குவந்தோம்
நல்லதென்றுசொல்லி நாய்க்கருக்கறிக்கையிட
வந்தவொருசேவகனை வாசல்தடையில்லாமல்
விசையரங்கசொக்கலிங்க வேந்தனதுகேட்டு
கூட்டிமிங்கேவாருமென்றுசொல்லனுப்பிவைத்தார்
வீரனதைக்கேட்டு விருப்பமுடனேநடந்தான்
பொம்மியர்க்குத்தான்விடுதி பொங்கமுடனேயமர்த்தி
விடுதியில்விட்டுவேந்தனிடந்தான்போனார்
கண்டுதுரைராசாவுங் காரணனைத்தான்பார்த்து
வாங்களென்றுசொல்லி வரிசையுடனிருத்தி
எந்தவூரெங்குவந்தீர் வந்தகாரியஞ்சொல்லென்றார்
வடதிசையில்நானிருந்து வந்தனையாவுங்களண்டை

ஆனதொருசேவகத்தை அடைவாகத்தந்தீரானால்
அரண்மனைவாசலிலே அசையாமற்காத்திருப்பேன்
என்றுசொன்னவீரனுக்கு எத்தமுள்ளராசாவும்
என்னகாண்சம்பளம் இயம்பென்றுதான்கேட்க
திங்களுக்கோராயிரம்பொன் திறமாகத்தரவேணும்
நல்லதென்றுசொல்லி நாய்க்கனுஞ்சம்மதித்து
ஆயிரம்பேர்சேவகர்க்கு அணித்தலைவனாகயிரு
உச்சிதமாக வுடுப்புகளைத்தான்கொடுத்து
இப்படிவீரன் இருக்குமந்தவேளையிலே
யானையின்மேலேறி அலங்கஞ்சுத்திவருகிறதும்
குதிரைமேலேறி கோட்டைசுத்திவருகிறதும
ஆருமறியாமல் அரண்மனைக்குப்போகிறதும்
...ங்கள்பூண்டு வீதிசுத்துவருகிறதும்
பதிவிரதப்பெண்களைப் பதியைக்குலைக்கிறதும்
சீரங்கநாயகரைச் சேவித்துவருகிறதும்
வேட்டைகளாடி விடுதிவந்துசேர்கிறதும்
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே
விசையரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராசன்
மெச்சுந்தேசக்குறிக்காரர் கிருஷ்ணப்பநாய்க்கனுந்தான்
பிள்ளைகளில்லையென்று பெருந்தவசுதானிருக்க
மாயனருளால் தந்துதித்தாள்மங்கையரு
புத்திரிபிறந்தவுடன் பூரித்துதானிருந்து
வேறோரண்மனையை விசித்திரமாய்க்கட்டிவைத்து

மங்கையந்த அரண்மனையில்மகிழ்ச்சியாய்த்தானிருந்தாள்
அரண்மனைக்குமுன்பாக ஆணிமுத்துவீரனுந்தான்
வருகிறபோது மருந்துபொடிவாசனையும்
வீசுவதைக்கண்டு வேலனையகண்ணாளும்
ஆரென்றுசொல்லி அவளெட்டித்தான்பார்த்தாள்
கன்னியிளமயிலைக் கண்டவுடன்வீரனுமே
ஆகட்டுமென்றுசொல்லி அதட்டியேதானடந்தான்
கண்டாளேவீரன்றனைக் களிப்புடனேசொக்கியவள்
மோகித்துப்பெண்மயிலாள்முகத்தையன்மேலிச்சைகொ [ண்டு
அன்னம்விரும்பாமல் அடைக்காயருந்தாமல்
எண்ணங்கொண்டேமிகவும் ஏங்கியவளிருக்க
பொம்மியருமப்போது போசனங்கள்தான்படைக்க
சாப்பிட்டிளைப்பாறித் தனிச்சிங்கவீரனுமே
நஞ்சுதின்றுநஞ்சுறுக்கு நடுச்சாமவேளையிலே
பகற்காலந்தான்பார்த்த பாவையரைமனதிலெண்ணி
படுக்கைவிட்டெழுந்து பாவையரண்மனைக்கு
ஆசாரவாசல் அரண்மனைவாசல்கடந்து
ஏறிமதில்கடந்து ஏந்திழைவீட்டேறிவந்து
ஏறரசுவீரனுந்தான் இசைவாகநிற்கையிலே
நாய்க்கர்மகள்தானு நல்நித்திசெய்கையிலே
மதுரைவீரனணிந்த வாடையவள்மேல்வீச
பள்ளிகொண்டுதானிருக்கும் பைங்கிளியாள்தான்பார்த் [து
இந்தபொடிவாசனை யேதுகாணென்றுசொல்லி
காலையில்கண்ட காரணனும்வந்தானோ

பாரென்றுசொல்லி அரிந்துவரவேண்டுமென்று
பஞ்சணைமெத்தைவிட்டு பெங்கிளியாள்தானெழுந்து
மாணிக்கப்பொற்கதவை மங்கையரும்போய்திறந்து
பார்க்குமளவி லாணிமுத்துவீரனிற்க
கண்டுமனமகிழ்ந்து கன்னிகையுமப்போது
மணவாளநிற்கிறதை மங்கையருந்தான்பார்த்து
மயங்கியேதான்விழுந்தாள் மன்னவனுமப்போது
மாணிக்கக்கையால மங்கையரைத்தானெடுத்து
கச்சைப்புறமையெடுத்துக் கன்னியர்க்குந்தானுமிட
சோகந்தெளிந்து தோகையுங்கூறலுற்றாள்
வாருங்காண்ராசவே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லத்தானு மேந்திழையாள் அருகில்வந்தாள்
கட்டியணைத்தார் கனிவாயைமுத்தமிட்டார்
அடைக்காயும்வெள்ளிலையும் அன்பாகத்தாமருந்தி
சிரித்துவிளையாடித் தேன்மொழியைத்தான்சேர்ந்து
தீராதஆவலெல்லாம் தீர்ந்துதெளிந்தபின்பு
மங்கையருமப்போது மகிழ்ச்சியாயெழுந்திருந்து
வீரையர்க்குத்தானும் வேண்டுமென்றபலகாரம்
அதிரசமும்தேன்குழம்பும் ஆனசுகிவடையும்
தீவுச்சரக்குத் தேசத்துச்சாராயம்
அத்தனைபுங்கொண்டுவந்து ஆண்டவர்க்குமுன்புவைத்து
இத்தனைநேரம் இளைப்புடனேயிருந்தீர்
பசியாறுமென்றுசொல்லிப் பைங்கிளியுந்தான்கூற
தென்மதுரைதானுஞ் சீக்கிரமாய்த்தான்புசித்து

அடைக்காயும்வெள்ளிலையும் அன்புடனேதாமருந்தி
வாருமடிபெண்ணரசே வார்த்தைச்சொல்லக்கேளுமினி
என்றுசொல்லிவீரையனு மேந்திழையுங்கேட்கலுற்றாள்
பெண்மயிலேநானும் போகிரேனரண்மனைக்கு
என்றுசொல்லித்தானும் எழுந்துநின்றாரப்போது
மன்னன்முகம்நோக்கி மங்கையருமப்போது
எப்போதுவருவீர்காணென்று சொல்லிக்கேட்கலுற்றாள்
மாதமொருதினந்தான் மங்கையரேநான்வருவேன்
என்றுசொல்லிவீரையனும் யிதமாய்வெளியில்வந்து
சுத்தாலேயேறி துருசாய்க்குதித்திறங்கி
ஆணிமுத்துவீரையனும் அசைந்துநடைநடந்து
வருகிறாள்பொம்மியவள் மாணிக்கமாளிகைக்கு
வீரையனுந்தானும் விடுதிவந்துசேர்ந்தானும்
பொம்மியருங்கண்டு பொங்கியேகோபங்கொண்டு
இந்நேரமட்டும் எங்குபோய்வந்தீர்காண்
முறையும்வரிசையில்லை மூர்க்கமுள்ளமன்னவனே
பெண்டுகளைக்கண்டால் பேய்போல்பறக்கிறீர்காண்
பாதகனேநானிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
என்றுசொல்லிப்பொம்மி யெடுத்தெறிந்துபேசியபின்
வங்கிமுகம்வாடி யெண்ணியழுகலுள்ளாள்
தண்ணிவெறிக்காரா தனஞ்சயனுந்தானுமப்போ

இத்தனைசலிப்பேண்டி எந்திழையேபொம்மியென்று
வாரியெடுத்து மார்போடேதாணைத்து
உன்னைவிட்டுநானும் ஒருவர்முகம்பார்த்ததில்லை
பைங்கிளியேயென்று பரவசமாய்மனந்தேற்ற
மனமுந்தெளிந்து அப்போ மங்கையருந்தானெழுந்து
சாதங்கறிவகைகள் நயவாகத்தான்படைத்தாள்
சா பிட்டிளைப்பாறி தக்கோலந்தானருந்தி
சிரித்துவிளையாடிச் சீராகத்தானிருந்தார்
விசயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராசாவை
கண்டுமனமகிழ்ந்து காத்திருக்கும்வேளையிலே
மன்னர்துரைராசனுக்கு மதுரையிலேதானிருந்து
வெள்ளித்தடிக்காரர் விராணவுத்தரங்கள்
ருசாகத்தானெடுத்து தூதுவர்களப்போது
ஆசாரவாசல்வந்து அடைவுடனேகைதொழுது
உத்தரமுந்தானெடுத்து ஓட்டமுடன்வந்தார்கள்
வந்தவொருவுத்தரத்தை வாசித்துப்பாருமென்றான்
மதுரையறுகாதம் வாழ்ந்துரைமுக்காதம்
வைகைநதியும் வற்றாதபொய்கைகளும்
சொக்கரிடசந்நிதியும் சொர்ணமணிக்கோபுரமும்
மீனாட்சிசந்நிதியும் வெண்முத்தால்கோபுரமும்
புஷ்பவனமும் பொய்கைதாமரைக்குளமும்
இப்படியாகவிருக்கும் எண்ணமெற்றராச்சியத்தில்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளரெல்லாம்
நாட்டிலுள்ளகள்ளரெல்லாம்நல்லாகக்கூட்டமிட்டு

அழகர்தன்கோயிலுக்கு யாரொருவர்போனாலும்
கண்டவிடமெல்லாங் கள்ளருபத்திரியத்தால்
உழவுநடவுமில்லை உபத்தெரியமதனாலே
கொல்லரிடத்தில்முடிப்பு கொடுக்கப்பயமாச்சு
இப்படியாகக்கள்ளர் இடக்குகள்செய்கிறார்கள்
என்றுசொல்லிநாய்க்கர் எழுதிவிட்டாருத்தரத்தை
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனுந்தான்கேட்டு
சபையிலுள்ளபேரையெல்லாந் தானும்முகம்பாத்து
ஆர்போவீரென்று அடைவுடனேகேட்டதற்கு
இராசன்முகம்நோக்கி நன்றாயெடுத்துரைப்பார்
அப்படிக்கொத்தகள்ளர் அஞ்சாதேநாட்டாரை
வெட்டிக்கருவருத்து விருதுபெற்றுவாரதற்கு
ஒருவராலாகாது உள்ளபடிசொல்லுகிறோம்
ஆயிரம்பொன்சேர்வை யானதொருவீரயனை
சேனைதளங்கூட்டி தெற்கேயனுப்பிவைத்தால்
கள்ளர்பற்றுநாட்டையெல்லாங் கடுகாகத்தானடந்து
சீக்கிரமாய்த்தான்வருவான் தெள்ளுமணிவீரையனு
என்றுசொல்லியெல்லோரும் இதமாயுரைக்கலுற்றார்
அந்தநல்லசேதி யடைவுடனேதான்கேட்டு
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராசாவும்
வீரையனைத்தானழைத்து வெகுமதியுந்தான்கொடுத்து
ஐயாயிரம்சேனைதளம் அடைவுடனேதான்கூட்டி
தந்தார்சிவிகை தான்கொடுத்தார்வீரையற்கு
வெள்ளைக்குடையும் வெண்சாமரமுடனே

பதினெட்டுமேளவாத்தியம்பாங்குடனேதான்கொ...
பஞ்சவர்னடால்விருது பட்டாவுந்தான்கொடுத்து
டைக்காயும்வெள்ளிலையு மன்பாகத்தான்கொடுத்து
போய்வாருமென்றுசொல்லிப் போற்றிவிடைகொடுத்
அனுக்கிரகம்பெற்றுகொண்டு ஆணிமுத்துவீரை [யா
பனும், ஏறினர்சிவிகையின்மே லெண்ணவொண்ணுச்
சேனையுடன், வெள்ளைக்குடைபிடிக்க வெண்சாமரம்வீச
பொம்மியரண்மனைக்குப் பொங்கமுடன்வாரார்காண்
கன்னியரும்பார்த்துக் களிப்பெய்துகொண்டாடி
என்றுமடையாத வெக்களிப்பைதானடைந்து
பூரித்துபொம்மியரும் பொங்கமுடன்வீற்றிருந்தாள்
ஆணிமுத்துவீரையனு மரண்மனையில்வந்திருந்தான்
இப்படியாக விருக்கின்றவேளையிலே
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராஜனுந்தான்
உக்கிராணந்தான்திறந்து உத்தமனார்வீரையற்கு
சேனைதளத்துக்குஞ் சொல்லுமென்றதிரவியமும்
முத்துக்கடுக்கனொன்றும் மோகனமாலையொன்றும்
சாலுவைகள்ரண்டு தார்வேந்தன்தானெடுத்துக்
கொல்லர்கையில்கொடுத்துக் குணமுள்ளவீரனிடம்
கொண்டுவரச்சொல்லிக் கொல்லரையனுப்பிவிட்டார்.
கொண்டுவந்தகொல்லர் கொடுத்தார்காண்வீரையற்கு
வீரையனுமப்போது வெகுவாய்மனங்குளிர்ந்து
கொல்லரையனுப்பிவிட்டுக் குணமுள்ளவீரையனும்
கணக்கரைத்தானழைத்து கடியவுரைக்கலுற்றார்

சேனாதளத்துக்கெல்லாம் செலவுக்குதான்கொடென்று
ஐந்துலட்சம்பொன்னெடுத்து அவர்கையிலேகொடுத்து
கணக்கெழுதவாருமென்று காரணனுமந்நேரம்
சம்பங்கியெண்ணைகொண்டு தலைமுழுகிமயிராற்றி
செங்கமலக்கையாலேசீக்கிரமாய்த்தான்முடித்து
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
புனுகுசவ்வாது புண்ணியனுமேல்பூசி
கண்டவர்கள்தான்மகிழ்ந்து கஸ்தூரிபொட்டுமிட்டு
போசனமண்டபத்தே போய்புகுந்தான்வீரயனும்
சாதங்கறிவகையுந் தான்படைத்தாள்பொம்மியரும்
சாப்பிட்டிளைப்பாறிச் சரசமுற்றுவீரையனும்
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தாமருந்தி
வாருமடிபொம்மியரே வார்த்தைசொல்லக்கேளுமென
றூர், மதுரையிற்கள்ளர்வந்து வழியிடக்குபண்ணுகிறார்
என்றுசொல்லிநாயக்கர் இதமுடனேயெனையழைத்து
போய்வாருமென்று போற்றிவிடைகொடுத்தார்
ஆகையினாலே யாரணங்கேநீதானும்
பயணமதாகிப் புரப்படும்பைங்கிளியே
யென்றுசொல்லிவீரையனு மெழுந்திருந்து அந்நேரம்
பொம்மியருங்கூடப் பொறுமையுடன்போகலுற்றான்
சதுரங்கசேனையுடன் காலால்களெல்லோரும்
பயணமதாகப் பார்மீதில்முழக்கமிட்டார்
பல்லக்கின்மேல் பைங்கிளியுந்தானேற

ஏறினார்குதிரையின்மேல் எடுத்தார்பெரியகத்தி [ரை
படைக்குநல்லபார்த்தனைப்போல் பரந்தாராந்தென்மது
மதுரை திசைநோக்கி மங்கம்மாள்சாலைவழி
நடந்தான்காண்வீரையனு நாலுதிசையதிர
ஆனையின்மேல்பேரிகை யதிரமுழங்கிவர
குதிரையின்மேல்டங்கா கூடமுழங்கிவர
தப்பட்டம்கொம்பு தவில்முரசுதானறைய
பஞ்சவர்னடால்விருது பக்கமெல்லாஞ்சூழ்ந்துவர
புண்ணியனார்வீரையற்குப் பூச்சக்ரக்குடைநிழற்ற
இருபுறம்வெண்சாமரமும் இன்பமுடன்வீசிவர
கட்டியங்கள்கூறக் கவிவாணர்பாடிவர
நடந்தான்காண்தென்றிசையில் நாலுதிக்குந்தானதிர
சேனைவருகிறதுஞ் செந்தூள்பறக்கிறதும்
காடுமலைகடந்து கரியதொருசோலைவிட்டு
சில்லென்றகாடுவிட்டுச் செடிமலையுந்தான்கடந்து
மணப்பார்வழியிலே வந்தடித்தார்கூடாரம்
கூடாரந்தானடித்துக் கோட்டைசலாதிவிட்டு
வீரையனும்வந்து விடிதியிறங்கினபின்
பொம்மியரும்வீரையனும்பொங்கமுடன்வீற்றிருந்தார்
தேசத்திலுள்ள திறள்மன்னரத்தனையும்
பாளையக்காரர் படைமன்னர்வீருமாய்
வீரையனைக்காண வெகுமதியுந்தானெடுத்து
வந்துமேகண்டு வணங்கியேதெண்டனிட்டார்
ஆரென்றுசொல்லி அன்பாகத்தான்கேட்டார்

பாளையக்காரரென்று பாங்குடனேசொல்லையிலே
எங்குவந்தீரென்று இதமுடனேதான்கேட்க
கள்ளர்உபத்திரங்கள் கனமாயிருக்குதென்று
அஞ்சாதிருங்களென்று ஆதரவுசொல்லையிலே
பாளையங்களெல்லாம் பசிபாயிறங்கினபின்
மணப்பாறைப்பையனும் மங்கபதிநாய்க்கருந்தான்
வீரையனைவந்துகண்டு வேந்தர்களுமப்போது
ஆணிமுத்துவீரையர்க்கும் ஆனதொருராணுவுக்கும்
அரிசிப்பருப்புடனே ஆனபதார்த்தங்களுடன்
வீரையற்கும்பொம்மியற்கும் விருந்துசமைத்தார்கள்
பொம்மியரும்வீரையனும் பொங்கமுடன்தான்புசித்து
சாப்பிட்டிளைப்பாறித் தாம்பூலந்தாமருந்தி
பள்ளிகொண்டாரிருவருமாய்ப்பாங்கானமெத்தையில்
கங்குல்விடிந்தபின்பு கதிரோனும்வந்துதித்தான்
பயணமென்றுசொல்லிப் பாரசின்னமூதலுற்றார்
தென்றிசையைநோக்கிச் சீக்கிரமாய்வருகையிலே
வெகுவாய்வருகுது வீரையன்சேனையென்று
தோராவுலக்கையனும் தும்பிக்கைப்பூச்சியனும்
இரண்டுதுரைமாரும் ஏற்றமுள்ளராணுவுடன்
மாம்பூண்டுஞ்சோலையிலே வந்துஎதிரேநின்று
கைகுவித்துதெண்டனிட்டு கட்டளைக்குள்தாமிருந்த
வீரையனுமப்போ மரைகாகத்தாழைத்து
எங்கேயிறங்கலாம் என்றுசொல்லித்தான்கேட்டார்
அடியேன்களுங்க ளறிந்தமட்டுஞ்சொல்லுகிறோம்

துவரங்குரிச்சுக்குத் துருசாகப்போய்ச்சேர்ந்தால்
தண்ணீர்சவிக்குயமுஞ் சாலேநல்லதோப்புகளும்
பேட்டைநல்லசாவடியும் பெரியசமைத்தெருவும்
ஊருக்குமேற்கே உயர்ந்தகிராமமுண்டு
பாளையந்தானிறங்கப்பதிவான இடமுமுண்டு
என்றுசொல்லியப்போது ஏற்றமுடன்தானுரைத்தார்
நல்லதென்றுசொல்லி நடந்தான்காண்வீரையனும்
பாளையப்பட்டார் பாதைகொண்டுகாட்டலுற்றார்
சேனைபடைத்தலமுந் தீர்க்கமுள்ளவீரையனும்
துவரங்குரிச்சுக்கு துருசாகப்போய்ச்சேர்ந்தார்
ஊருக்குமேற்கே உயர்ந்திருக்குமேட்டின்மேல்
அனுமந்தகூடாரம் அடைவாகத்தானடித்தார்
கோட்டைசலாகிவிட்டுக்கொள்ளைகொண்டவீரையனும்
விடுதியில்தானுமப்போ விற்றிருந்தான்தென்மதுரை
அந்தநல்லவேளையிலே ஆனதொருவுலக்கையனும்
தும்பிக்கைபூச்சியனுந் துரிதமுடன்வீரையற்கு
விதம்விதமாய்வுலுப்பைகள் விபரமாயனுப்பலுற்றார்
நெய்க்குடமுந்தயிர்க்குடமு நேரானபாற்குடமும்
ஆட்டுக்கிடாக்களும் அடைவானபன்றிகளும்
கோழியுடன்காய்கறியும் கொள்ளைகொண்டவீரையற்கு
அத்தனையுமான்பேரில் அன்பாகத்தானெடுப்பித்து
எடுத்தங்கேசென்றிவற்றை யெதிராகத்தான்வைத்து
வுலக்கையனுமபூச்சியனும் இசைவாகக்கைதொழுதார்
கூடவேகைதொழுதார் குணமுள்ளவீரையனும்

வாருமென்றுசொல்லி வரிசையுடனேயழைத்து
இருவர் துரைமக்களுக்கு மின்பமொடுவீரையனும்
ஆளுக்கோர்சாலுவை யன்பாய்பரிசளித்தே
இனிதாயுபசரித்து இருங்களென்றுவார்த்தைசொல்ல
அகமுங்குளிர்ந்து அடைதியுடனங்கிருந்து
வீரையற்கும்பொம்மியற்கு மேலானவிருந்துசெய்ய
சம்பாவரிசிகொண்டு சமைத்தார்கள்காய்கறிகள்
ஆட்டுக்கறியும் ஆனவகைபதார்த்தமுடன்
அளவில்லாகறிவகையும் அதிகசுவைதான்சமைத்து
அவ்விருவர்களுக்கு மன்னம்படைத்தார்கள்
உண்டுபசியாறி உட்கார்ந்திளைப்பாறி
தாம்பூலந்தான்றறித்துச் சயனித்தார்பூவணைமேல்
பூச்சியனுமுலக்கையனும் பொழுதுவிடியுமட்டும்
கண்ணிமைகாப்பதுபோற் காத்திருந்தார்கடிதாக
அன்பர்வினைபோ லகலவிருள்கூட்டம்
பச்சையிலைமேற் பரிதியும்வந்துதித்தான்
தூக்கமொழித்துத் திடுகென்றெழுந்திருந்து
தந்தந்துலக்கித் தடாகத்தினீராட்டிச்
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்புமிட்டு
வண்டத்துதுக்கரைப்போல் வடிவுள்ளபாகைகட்டி
அங்கினிசார்தொட்டு அடைவுடனேகச்சைகட்டி
பதினெட்டுஆயுதமும் பாங்குடனேதான்பிடித்து
கூடாரந்தான்பிடுங்கி கொள்ளைகொண்டவீரனுமே
ஏறினார்வாசி எடுத்தார்நெடுங்குடையை

பயணம்புறப்பட்டார் பரிவாரந்தன்னோடே
ஊதினார்சின்னம் உலகமெல்லாந்தானதிர
வீரன்தன்சேனை வெகுவாய்வருகுதுகாண்
நத்தத்துலிங்கையனும் நாழிகையிற்றான்கேளுடு
வீடுமெழுகி விநாயகக்கோலமிட்டு
தோரணங்கட்டி சுபலோகந்தானுமிட்டு
வீரனுக்கும்பொம்மியற்கும் விடுதியலங்கரித்து
வீதிக்குவீதி விதமாகப்பந்தலிட்டு
படியரிசியாவற்றும் பரங்குடனேதான்கொடுத்து [ன்
அடிபணிந்துவீரனுக்கு அடைவுடனேதான்கொடுத்தா
கண்கள்மனமகிழ்ந்து களப்பிரியமுண்டாகி
வாருமென்றுசொல்லி வாஞ்சையுடன்தானழைத்து
மோகனமாலையொன்றை முத்துக்கடுக்கனொன்றை
வெகுமதியாகக்கொடுத்து வீரனுமப்போது
நத்தத்துவீதியிலே நலமாகப்போயிறங்கி.
சந்தோஷப்பட்டு தனஞ்செயனும்வீற்றிருந்தான்
நத்தத்துலிங்கையனும் நல்விருந்துதான்செய்தான்
பொல்லாத்தரித்திரமாம் புன்னிரவுபோனவுடன்
நல்லசம்பத்தென்னும் நறுமலரான்வந்துதிக்கும்
மறுநாள்காலையிலே மன்னனெழுந்திருந்து
தந்தபந்திசுத்திசெய்து தானணிந்தார்வெண்ணீறு
பாளயத்தையெச்சரித்தான் படைமுரசுதானதிர்ந்து
மதுரையைநோக்கி மனமகிழ்ந்துபோகையிலே
சதுரங்கசேனைகளுஞ் சதிராகத்தானடந்து

காடுமலேகடந்து கடியவனங்கடந்து
திருமலேநாய்க்கருடைய சீமைதனைத்தொடர்ந்து
வைகைக்கரையோரம் வந்திறங்கியப்போது
அண்டமுகமதிர அடித்தார்கள்கூடாரம்
பொம்மியருந்தானும் பொங்கமுடன்வீற்றிருந்தார்
கூடாரம்வந்தபின்பு கோட்டைத்தலேயாரி
திருமலேநாய்க்கன்முன் திடீலென்றோடிவந்து
வடக்கேயிருந்து வருகுதையாசேனேதளம்
மாற்றான்படையோ மறுமன்னர்தன்படையோ
என்றுசொலித்தலேயாரி இணக்கமாய்த்தானின்றான்
திருமலேநாய்க்கரும் அச்சேதிதனேக்கேட்டு
ஆராணுலென்ன ஆகட்டுமென்றுசொல்லி
அறிக்கைபிராமணரை அன்பாகத்தானழைத்து
ஆரென்றுசொல்லி அறிந்துமெள்ளவாருமென்றார்
அப்போதுவேதியரும் ஆண்சிங்கவீரனிடம்
போனார்கள்சேதிதன்னேப் பூராயமாய்த்தெரிந்தார்
வேதியரைத்தானழைத்து வீரனுஞ்சொல்லலுற்றார்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனெனேயழைத்து
மதுரைக்குள்ளேபோய் வண்டரெனுங்கள்ளர்களே
மடக்கிவாவென்று மதித்துஎனேயனுப்ப
ஆகையினாலேயிங்கு அடைவுடனேவந்தேனென்றார்
சீக்கிரமாயுத்தரத்தைத் திருமலேநாய்க்கன்முன்னே
சொன்னார்களந்நேரம் திருமலேநாய்க்கன்கேட்டு
வீரனுக்குவேண்டிய விடுதியெலாமமைத்து

வாசற்பிரதானி வரிசைபெற்றசாம்புவனை
எதிராகப்போய்நின்று ஏந்தலெனும்வீரனைத்தான்
அழைத்துடனேவாருமென்று ஆக்யாபித்தேயனுப்ப
சாம்புவனுமப்போது தார்வேந்தன்சொற்கேட்டு
எழுந்திருந்துவாசின்மே ஏறிப்போனனுடனே
குதிரைபரிவாரங் கோடிதளம்பின்றொடர
பதினெட்டுமேளம் பண்பாயறைந்துவர
வெள்ளைத்துகில்விசிரி விதமுடனேதானடந்தான்
சேனுதிபதிசேனை தளமும்வருகுதென்று
வீரனுமப்போது வெகுவாய்மனமகிழ்ந்து
ஆனைமிதளவுதான் அழகாகவேயிறக்றி
மத்தகத்தைத்தொட்டு மாவீரன்பொம்மியரும்
ஏறிவுட்கார்ந்து இனிதாய்வழிநடக்க
ஆணிமுத்துவீரனுமே அரண்மனையில்வந்திறங்கி
சம்பங்கிபெண்ணையால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிரைக் குடிமிட்டெச்சிக்கறுத்து
சிரானநெற்றிதனில் திருநீறுதானணிந்து
கெந்தமுங்கஸ்தூரி கீர்னூர்மார்பதனில்
கட்டுவர்க்கந்தானணிந்து காரணனுமப்போது
அறுசுவையோடன்னம் அருந்தியிளைப்பாறி
ஏலம்லவுங்கமுடன் இளவெற்றிலைபாக்குடனே
தரித்துவிளையாடிச் சரசபொம்மியைப்பார்த்து
வாருமடிபெண்ணே ஒருவார்த்தைசொல்லக்கேளுமடி
கள்ளரைக்கொல்லக் கட்டளைகளிட்டாரடி

திருமலைநாய்க்கர்தம் தெரிசனஞ்செய்வதற்கு
போய்வாரேனென்று பொன்பல்லக்கேறிப்போய்
திருமலைநாய்க்கருந்தான் சிறப்பாகொலுவிருக்கும்
ஆசாரவாசல்வழி அழகாகத்தான்கடந்து
பல்லக்குவிட்டிறங்கிப் பாராளும்வீரனுந்தான்
திருமலைநாய்க்கரைத்தான் சேவித்துக்கொண்டுநின்றான்
கூடவேநாய்க்கருந்தான் கும்பமிட்டுத்தான்தொழு
பக்கமிருந்துகொண்டு பண்பாகவார்த்தைசொல்வார்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளரெல்லாம்
மதுரைக்கடைத்தெருவை வந்துமெள்ளக்கொள்ளையிட்டு
தானிமுதல்சேனையெல்லாம் தாங்கள்பறிப்பதனால்
விசையரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராசானுக்கு
எழுதிவிட்டபடியே இயற்கையுள்ளராசனுமே
உம்மையனுப்பினதா லுத்தமனேநீர்வந்தீர்
கள்ளர்கள்தங்கள் கருவையறுத்துவாரும்
என்றுநாய்க்கர்சொல்ல இணங்கியேவீரனுமே
பட்சத்தினத்திலே பட்சமில்லாக்கள்ளரைத்தான்
வெட்டிக்கருவறுத்து வெற்றிகொண்டுவாரனென்றான்
நாய்க்கரதுகேட்டு நன்றாய்மனங்குளிர்ந்து
வீரனுக்குத்தானும் வெகுபதிகளைக்கொடுத்து
அடைக்காயுவெள்ளிலையு மன்பாகத்தான்கொடுத்து
அரண்மனைக்குப்போவென்றுஅனுப்பினார்வீரனைத்தான்
அரண்மனைவீரனுந்தான் அடைவுடனேவீற்றிருந்தான்
அன்றிரவுநீங்கி ஆதித்தன்வந்துதித்தான்

வீரனெழுந்திருந்து விடியற்காலேக்கடனே
எல்லாமுடித்துநகர் எங்குமுலாத்திவந்து
சாப்பிட்டிளைப்பாறி சாமிதுரைனுந்தான்
சாயங்காலந்தீவட்டித் தான்போட்டுக்கொண்டுமவன்
சொக்கரிட்சந்நிதிக்குத் தருசாகத்தானேக்கி
பார்த்தனேவேளைக்கு தினம்போய்தரிசித்து
வருகிறநாளையிலே மலேத்திருடர்கள்ளரெல்லாம்
கூட்டமிட்டுவலேதடியைக் கொண்டுபுரப்பட்டு
மதுரைக்கடைவீதி வந்துநுழைந்துகொண்டு
காசுபணம்நாணயத்தைக் கனக்கவேகொள்ளையிட
பட்டணத்திலுள்ள பரிசனங்களெல்லோரும்
கோவென்றசத்தங் கூக்குரலுந்தானுயிட
கரத்தலேயாரி நாட்டமுடனேடுவந்து
வீரனுடனேசொன்னன் வீரனுமப்போது
இணக்கமுள்ளபொம்மியர்க்கு இதுசேதியைச்சொல்லி
போய்வருகிறேனென்று புறப்பட்டார்வீரனுந்தான்
குதிரைமேலேறிக் கூராயுதந்தரித்து
சேனைதளத்துடனே சிறப்பாகவேசொல்ல
வடக்குநல்லவாசலிலே வகையுடனேதானடந்தார்
நலமுடனேவீரனுமே நடந்தான்காணம்மானே
பொல்லாதவீரனுந்தான் போர்செய்யக்கோபித்து
கட்டாரவுருவிகொண்டு பதட்டமுள்ளகள்ளர்மேல்
பாய்ந்தான்குதித்தவன் பதிவிருந்துதானுழைந்து
வீசினன்கள்ளர்களை வீராதிவீரனுந்தான்

முன்வீச்சுக்காயிரம்பேர் முனைவீச்சுக்காயிரம்பேர்
இந்தப்படிக்கு இறக்கடித்தான்வீரனுந்தான்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளர்களும்
கொக்கரித்துச்சேனைதளங் கோடிபடைதான்வந்து
ஈட்டிக்கோலாலே எறிந்தார்கள்வீரையன்மேல்
கண்கள்செவுந்து கடுங்கோபந்தான்பூண்டு
வாகுநல்லசமதாடு வண்மையுடன்தான்பூண்டு
யானைக்கூட்டத்தில் யாளிவந்துபாய்ந்ததுபோல்
பொல்லாதவீரன்மேல் பூர்த்தியாய்வீசலுற்றான்
கள்ளர்படைகளெல்லாங் கலங்கியேமெய்மறந்து
மெய்சோர்ந்துவீழ்வாரும் விதிவசமென்பாருப்
ஆதிசிவனுக்கு அபயமென்றுவீழ்வாரும்
ஈட்டிக்கோல்வைத்தபடி இறந்துமடிவாரும்
அச்சமற்றகாட்டுக் கழிவுவந்துநேர்ந்ததென்று
இன்றுமுடிநததுகாண் எங்கள்பலமெல்லாம்
கள்ளரெல்லாம்புலம்பிக் கைசோர்ந்துவீழ்ந்தார்கள்
இப்படியாக விருக்குமந்தவேளையிலே
கள்ளர்படைசேனையெல்லாங் கருவறுத்தவீரன்றன்னை
தேவரெல்லாங்கண்டு சிறப்புடனேபார்த்திருந்தார்
நாலுதிசைமெச்ச நல்வீரன்கொலுவிருந்து
வெள்ளானைமீதேறி வெற்றிகொண்டுவாரார்காண்
செயபேரிகையடித்துச் செப்பமுடன்வாரார்காண்
பஞ்சவர்னடால்விருது பக்கமேசூழ்ந்துவரக்
நாகசுரமேளம் நாட்டியப்பெண்ணுடிவர்

மதுரைதிசைநோக்கி வாரார்காணம்மானே
கள்ளர்பற்றுநாட்டையெல்லாங் கடையாப்பறக்கவிட்டு
சகலசம்பிரமத்துடனே சாமிமுத்துவீரன்றான்
வருகிறானென்று வகையுள்ளதூதர்களும்
கச்சிதிருமலைநாய்க்கர் கனத்தகொலுவில்வந்து
சேதிதனையெல்லாஞ் செப்பலுற்றாரந்நேரம்
கச்சிதிருமலைநாய்க்கர் காதுகொடுத்துக்கேட்டு
சந்தோஷப்பட்டு தாதியரைக்கூப்பிட்டார்
கணாட்சிமீனாட்சி செண்பகப்பூராச்சியரே
பச்சைநிறத்தாளே பவளக்கொடியாளே
சிலாப்பத்தினியாள் வானத்தருந்ததியாள்
இந்தப்படிக்கு இயலானதாதியராம்
ஆயிரந்தாதியரை அன்பாகவேயழைத்து
வெற்றிகொள்வீரன்மேல் திருஷ்டிகழிக்கப்போவென்
ஆலாத்திசோடித்து அடைவுடனேதானடந்து [றான்
எதிர்கொண்டுபோவென்று எசமானனுப்பவேதான்
நவரத்தினம்பதித்த நல்லாலாத்திசாடித்து
ஆணிமுத்துவீரனுக்கு ஆலாத்திசுற்றினார்கள்
அந்தமுள்ளவெள்ளையின்மேலாசைகொண்டுவீரன்றான்
யானையைவிட்டிறங்கி அரண்மனைக்குள்ளேசென்று
திருமலைநாய்க்கன்றனைச் சிறப்புடனேபோய்கண்டார்
அந்தநாய்க்கன்தானு மன்புடனேவீரனுக்கு
கைலாகுகொடுத்துக் களிப்புடனேவரவழைத்து
சிங்காதனத்தருகே சிறப்பாயிருக்கவைத்து

அடைக்காயும்வெள்ளிலையு மன்புடனேதான்கொடுத்து
கள்ளர்பற்றுநாட்டைக் கருவறுத்துவந்தீரோ
உம்மைப்போல்தேசத்தில் ஒருவரையுங்கண்டதில்லை
இனிப்போதிருக்கிறீர் ஏற்றமுள்ளவீரையனே
காலையிலேநாமும் கலந்துவசனிப்போம்
என்றுசொல்லிநாய்க்கர் இசைவாகத்தானனுப்ப
நல்லதென்றுவீரையனும் நாய்க்கரைத்தான்தொழுது
அரண்மனைவாசல்விட்டு அடைவாகத்தான்வந்து
யானைமேலேறி ஆணிமுத்துவீரையனு
பொம்மியரண்மனைக்குப் பொருமையுடன்போய்சேர்ந்து
கட்டுவர்க்கந்தானவிழ்த்துக் காரணனுமந்நேரம்
வெந்நீறுதன்னாலே வீரையனும்ஸ்நானஞ்செய்து
கோதிமயிராற்றிக் கோணமல்சிக்கறுத்து
வாரிமுடித்து வகையுடனேவேஷ்டிமட்டி
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
உண்பசியாறி உத்தமனார்வீரனுந்தான்
அடைக்காயுவெள்ளிலையு மன்புடனேதாருந்தி
பஞ்சணைமெத்தையின்மேல் படுத்துமெள்ளவெழுந்திருந்து, ஆலாத்திபெண்களி ஆனதொருவெள்ளையிலேன்மேல், தீராதஆசைகொண்டு சீக்கிரமாயெழுந்திருந்து
கட்டுவர்க்கந்தானுடுத்திக் கனகப்பணிபூண்டு
சீவிநல்லகொண்டையிட்டு சிங்காரமாய்த்தானடந்து
கோட்டையின்மீதேறிக் குதித்தான்காணம்மானே
வெள்ளையம்மாள்தன்வீடுதேடி விதமுடனேநோக்கியவன்

அங்கையற்கண்ணம்மையற்கு அடிபணியும்வெள்ளையம்
மாள், மீனாட்சிசந்நிதிக்கு முன்பானமாளிகையில்
தூங்குமஞ்சக்கட்டில் துலங்கவலங்கரித்து
பஞ்சணைமெத்தையிலே பைங்கிளியாள்வெள்ளையரும்
நினைவுதெரியாமல் நித்திரைசெய்கையிலே
உல்லாசமாக ஒயிலழகர்தென்மதுரை
விதிப்பயனையெண்ணமல் மெல்லியர்மேலாசைகொண்டு
மதிமேலறித்தான்குதித்து மண்டபமுந்தான்கடந்து
பத்தினியாள்பள்ளிகொண்ட பாரவிடந்தன்னில்வந்து
இருந்துநினைத்தான் எண்ணமுற்றகாளையவன்
தட்டியெழுப்பினல் தையலெழுந்திருந்து
கூவென்ருல்வெள்ளையருங் கூடிடுமோர்வாதரெல்லாம்
என்றுபலவாறு யெண்ணியெண்ணியேக்கமுற்று
மூவர்துணையென்று மூர்க்கமுள்ளவீரனுமே
தோளில்மீதிருந்த துப்பட்டிகீழ்பரப்பி
மெள்ள அசையாமல் மெல்லியரைத்தூக்கிவைத்து
கட்டியிறுக்கிக் கையாலேதான்தூக்கி
மாளிகையும்விட்டு மண்டபத்தைத்தான்கடந்து
தானிருக்குங்கோட்டையைத் தாண்டிக்குதிக்கையிலே
வேவுகாரர்கள்ளரென்று வீரயனைதான்பிடித்து
ஆரென்றுசொல்லி அதட்டியவர்தான்கேட்டார்
பத்தினியைக்கொண்டுவந்த பாவம்பலித்ததென்று
ஏங்கிமுகம்வாடி யென்னசொல்லப்போருமென்று
ஒன்றுஞ்சொல்லாம லூமைபோல்தானிருக்க

திருமலைநாய்க்கருக்குச் சேதிசொல்லிவாருமென்று
அனுப்பிவைத்தார் தூதுவனை ஆனதொருசேவகனும்
தூதுவருமப்போது திருசாகத்தானேடி
ஆசாரவாசல்நின்று அடைவுடனேசொல்லலுற்றார்
திருமலைநாய்க்கர் சேதிதனைக்கேட்டு
கள்ளனையிங்குகாண் கொண்டுவாவென்றுசொல்ல
கட்டளையிட்டபடி காவலர்களோடிவந்து
கள்ளனென்னும்வீரையனை கட்டியமூட்டையுடன்
நாய்க்கர்முன்னேகொண்டுவந்து நடுநீதிகேட்டலுற்றார்
திருமலைநாய்க்கருந்தான் திருடன்மூட்டையைத்திறந்து
பார்க்கும்போதங்கே பாவைவெள்ளம்மையென்று
கண்டவனைத்தானிறுத்திக் கள்ளனைக்குற்றத்தினால்
கானகத்திற்கொண்டுபோய் கைகாலைவாங்குமென்றார்
காவலருங்கள்ளனை காட்டில்கொண்டுபோயவரும்
கைகாலைவெட்டிவிட்டுக் காவலர்கள்வந்துவிட்டார்
வீரனுந்தன்னுடைய விதிதனைத்தானினைந்து
ஆதிசிவன்மாயவர்க்கு அபயமென்றுதான்சொல்லி
எண்ணுதுமெண்ணி யிருக்குமந்தவேளையிலே
அப்போதுவெள்ளையரும் அசைந்துநித்திரைசெய்து
பார்க்கவேவீரன் பக்குவமாய்நின்றிருக்க
கண்டவுடன்யோசித்துக் காரிகையுஞ்சொல்லுகிறாள்
நானேபதிவிரதை நியாயந்தெரியாமல்
தொட்டெனையழைத்துத் தூக்கியேவந்ததினால்
இனியெனக்குநீபுருஷன் என்பதற்கோரையமில்லை

பொல்லாதகோவே கூடவேநான்வருவேன்
உன்துக்கம்என்துக்கம் ஒன்றல்லவேறில்லை
ஒற்றுமையாகி யுயிரைவிடுவேன்காண்
என்றுதிடமாக இயம்பினுள்வெள்ளையம்மாளும்
இவள்சொல்லும்சொற்கேட்டு இருந்தவர்களப்போது
ஆணிமுத்துவீரனென்று அவனைவோருந்தாமருந்தி
உண்மையாயின்னுனென் றுண்மையறியாமல்
கைகாலறுத்துவிட்டு காரணத்துக்கென்னசெய்வோம்
என்றுசொல்லிச்சேவகர்கள் இணங்கிவணங்கலுற்றுர்
காலில்விழுந்து கதறியழுகலுற்றுர்
அழுதசத்தந்தான்கேட்டு ஆரணங்குபொம்மியரும்
ஆரோயெவரோ அறிந்துவருவோமென்று
அன்னம்போலேவந்து அருகில்வந்துதானின்று
வீரனைத்தான்பார்த்து விம்மிவிம்மிதானழுது
பாதகாநானிதற்கோ பற்றிவந்தேனுனம்பிறகே
கால்கையறுப்புண்டிருக்கக் காணவோவந்தேனுன்
எழுத்தையறியாமல் எண்ணினேன்கோடிசிந்தை
ஆண்டவனேயுந்தனுக்கு அசடுவந்தவாறேது
மன்னவனேயுந்தனையும் வழிமதிப்பாருண்டோதான்
என்றுசொல்லிப்பொம்மியரும் ஏங்கிஷிசனமுற்றுள்
புருஷனும்வாய்திறந்துபொம்மியற்கு சொல்லலுற்றுன்
ஆதிசிவன்பிரம்மா அன்புள்ளமாமனுமே
கூட்டிஎழுதினதைக் குறைப்பாரோபெண்ணரசே
எழுத்தையழிக்க எவரால்முடியுந்தான்

சூரியகுலத்துதித்துத் தோற்றமுடன்வீற்றிருந்தேன்
மாறுபடாவம்மிசத்தில் வந்துபிறந்தேன்காண்
பொம்மியரேதானும் பூமியிலிருப்பதில்லை
மீனாட்சிபொற்பதத்தை விருப்பமுடன்சேர்வதன்றி
அரைநொடியும்நானிருக்க அதிகாரமில்லையடி
ஆரணங்குபொம்மி அதுசேதிதான்கேட்டு
மன்னவனேயுன்னைவிட்டு மண்மேலிருப்பதில்லை
கூடவருவேன்காண் கொள்ளைகொண்டராசாவே
என்றுசொல்லிபொம்மி பிதக்கமாய்த்தானடந்து
வைகைநதியில் வளமயிலாள்ஸ்நானம்பண்ணி
கூந்தலுதறியங்கே கோடாலிமுடித்தான்போட்டு
கூரையுடுத்திக் கோலப்பணிபூண்டு
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
எலுமிச்சங்காய்கையில் ஏந்திகொண்டுதானடந்து
அம்மாமீனாட்சி அடியாளும்வாரேனம்மா
சிவசிவாசொக்கலிங்கர் சீர்பாதங்காணவென்று
பயணபயணமென்று பைங்கிளிந்தானடந்து
வீரனிருக்குமிட மேவியேதான்சேர்ந்தாள்
அந்தவிதமாயிருக்கும் அவ்வேளையில்மிகவும்
வெள்ளைமருந்தான்பார்த்து விதவிதமாய்த்தானணிந்து
என்னொருபெண்ணாலே இடியேறுவீரனுக்கு
கொல்லரிபொல்லாங்கு சுத்தமாய்வந்ததினால்
திருமலைநாய்க்கருக்கு சேதிதனைசொல்வோமென்று
வாடியபாளையருடனே வந்துநின்றுசொல்லவேதான்

திருமலைநாய்க்கர் சேதிதனைக்கேட்டு
அருமையுள்ளபிள்ளைக்கு அசடுவந்துநேர்ந்ததென்று
ஆசாரவாசல்மட்டும் அலறியேதான்புரண்டு
ஆடைகலைய ஆபரணந்தான்புரள
ஓட்டமாயோடி உத்தமனைத்தான்பார்த்து
அப்பாமகனேயென்று அலறியேதானழுது
வெள்ளையரைவேணுமென்று விதமுடனே சொல்லவமா
னல், கோதைமயிலைக் கூட்டிவந்துதாரேனே
எந்தனதுபெண்ணை இஷ்டமுடன்கேட்டாலும்
கல்யாணந்தான்முடித்துக் கண்ணாலேபாரேனே
நான்தாண்டாவீரனென்று நலமுடனேசொல்லாமல்
பேசாமலிருந்ததினால் பிழைமோசம்வந்ததுகாண்
என்றுசொல்லிநாய்க்கர் ஏங்கிமுகம்வாடி
மீனாட்சிசன்னதிக்கு விருப்பமுடன்தான்சென்று
உத்தரவுதான்கேட்டு ஒருநொடியில்நான்வருவேன்
என்றுசொல்லுஅப்போது இசைவுடனே போனார்காண்
சொக்கர்திருவாலயத்தில் துருசாகப்போய்புகுந்து
முக்கால்வலம்வந்து மூவிருக்காய்தெண்டனிட்டு
திரிபுரமெரித்தவர்தங் தேவிபரமேஸ்வரியே
வீரனுக்குவந்த விதிப்பயனைநீருமம்மா
கைகால்வளர்ந்து கடுகவெழுந்திருக்க
வேண்டுமம்மாதாயே வேதாந்தநாயகியே
என்றுசொல்லநாய்க்கர் ஈஸ்பரியுந்தான்பாத்து
கால்கையுந்தான்வளரக் கட்டளையுமிட்டாள்காண்

திருமலைநாய்க்கருந்தான் திரும்பிவருவதற்குள்
மீனாட்சிகிருபையினால் வீரனுக்குமுன்போல
கால்கையுந்தான்வளர்ந்து கடிதாயெழுந்திருந்து
திருமலைநாய்க்கர்முன்னே சீக்கிரமாயோடிவந்து
வாருமையாராசாவே வார்த்தைசொல்லக்கேளுமையா
மாறுபாடாவம்மிசத்தில் வந்துபிறந்தேன்காண்
மாறுபடாமேனியிலே மாறுபடவாச்சுதுகாண்
பூவையாலென்னுயிர்தான் பொன்னுலகம்போகுதையா
அன்றெனக்கு ஆயனெழுத்திப்படியே
வாய்த்தென்றுவீரன் வண்மையுடன்தானுரைக்க
காதினாற்கேட்டு கண்ணீர்விட்டாநாய்க்கரவர்
வாழ்வும்பெருஞ்செல்வ மாயமிதுராஜாவே
நீரின்மேற்குமிழி நிலைமையற்றவாழ்க்கையிது
என்றுமிருந்தாலும் இறப்பதுநிச்சயந்தான்
சலித்துநீர்தானழுகத் தர்மமோராஜவே
என்றுசொல்லிவீர னிதமாகத்தேற்றிநின்றார்
பெண்களிருவருமே பிரியமாய்த்தீக்குதிக்க
நற்சவுக்கமாக நலமானதீக்குழியை
உண்டுபண்ணிவைக்கநீ றுத்தாரஞ்செய்யுமையா
திருமலைநாய்க்கன் சேதியிதுவறிந்து
வைகைக்குத்தான்போய் மாந்தோம்புக்குட்புகுந்து
தீக்குழிக்குஆன செம்மையுள்ளதாவதனை
கண்டிருழிர்னக் கடுகவேவெட்டிவைத்து
சந்தனக்கட்டைகொண்டு சதுராகத்தான்பரப்பி

தீக்குழியைச்சுற்றி செயமங்களஞ்சொல்லி
வேதியரைத்தானழைத்து விதியாகச்செய்யென்றார்
ஆலாத்திசுற்றும்பெண் ணனதொருவெள்ளையரும்
பொன்னனதிருமேனி பொம்மியருங்கூடவேதான்
ஏற்றமுள்ளவீரன்முன்னே யிருவரையுந்தாழைத்து
அன்னதானஞ்சொர்னதான மன்பாகச்செய்வித்து
கோதானம்பூதானங் கோதையரால்செய்வித்து
காரிகையேநீங்களிருவர் கைலாயஞ்சேருமென்றார்
காதினால்கேட்டுக் காரிகைகள்தாமுமப்போது
பூரித்துமேனி பொங்கியிருவருந்தான்
பூண்டிருந்தஆபரணம் பொறிபொறியாய்த்தான்தெறிக்க
சந்தோஷமாயிருவர் சாமிமுத்துபாதத்தில்
புடைவுடனேதெண்டனிட்டு அன்பாயிருபேரு
இருபேருந்தெய்வத்தை இதமாகவேதொழுது
சுத்திவந்துதீக்குழியைச் சுத்தமனதுடனே
சந்தோஷமாகவேதான் சலியாமலேகுதித்தார்
தேவாதிதேவரெல்லாந் திட்டமுடனேபார்த்து
ஆகாசகங்கந்தருவர் அனைவோரும்பூச்சொரிய
தேவதுந்துமிதானுஞ் சீக்கிரமாய்த்தான்முழங்க
தீக்குழியைவீரனுமே சீக்கிரமாய்த்தான்மூடி
சடங்குகளெல்லாஞ் சதிராகத்தான்முடித்து
வைகைநதிக்கரைக்கு வண்மையுடன்தானடந்து
ஸ்நானமதுசெய்தபின்பு தயவாகப்பிராமணர்க்கு
வஸ்திரங்காசுபணம் வண்மையாய்த்தான்கொடுத்து

பொற்றாமரைக்குளத்தில் பொறுமையுடன்போயிறங்கி
கோடாலிமுடியவிழ்த்து குளத்திலேஸ்நானஞ்செய்து
சிவசிவாவென்று திருநீறுதானுமிட்டு
சந்தனம்புனுகுஞ் சவ்வாதுடன்கதம்பம்
பூசிதிருமேனியெங்கும் பொங்கமுடன்தானணிந்து
மிதியடியும்பூண்டு மேல்ருத்திராட்சந்தாமணிந்து
என்தாயேமீனாட்சி ஈஸ்வரியேயென்றுசொல்லி
காளைமுத்துவீரனுமே கடிதாகத்தான்வந்து
ஆதிசிவனேயென்றுயென்று அன்புடனேதானடந்து
மீனாட்சிசந்நிதிமுன் விரையனும்வந்துநின்று
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டான்
[illegible]லநாயக்கர்தனை திரும்பிமுகம்பார்த்து
[illegible]ன்றுசொல்லி வண்மையுடன்தானழைத்து
மீனாட்சிபொற்பாதம் விதமுடனேசேர்வதற்கு
உத்தரவுசொல்லுமென்று ஒருவார்த்தைத்தான்கேட்க
மனதுக்குகந்தபடி மகிழ்ச்சியுடன்செய்யுமென்றார்
போய்வாரேனென்றுசொல்லி கூறியேவீரனுமே
பார்வதியின்கோயில் பதினெட்டாம்படியேறி
என்தாயேமீனாட்சி யெனக்கென்னபுத்தியென்றான்
முந்தியபூசை முதற்பூசையுன்னதுகாண்
கம்பத்தடியில் காத்திருந்துபூசைகொள்வாய்
என்றுசொல்லிமீனாட்சி ஏற்றவரங்கொடுத்தாள்
காளைமுத்துவீரனுந்தான் கம்பத்தடியில்வந்து
கன்றறுக்குஞ்சூரிதனைக் கையிலேதான்வாங்கி

பார்வதியேயுந் தனிட பாதங்கதியென்று
கடிகைதவருமல் கழுத்தையறுத்துக்கொண்டான்
வீரன்சிரசதுதான் மீனாட்சிபதம்விழவே
அல்லவருங்கூடி ஆச்சரியப்பட்டார்கள்
வீற்றிருந்தசேனையுடன் திருமலைநாய்க்[...]வரையும்
மீனாட்சியம்மனப்போ விடுதிபோய்[...]சேருமென்றான்
அப்படியேயெல்லோர[...]னைப்போய்ச்சேர்ந்தார்
கள், அன்றுமுதல்முன்றுநாள் ஆணிமுத்துவீரனுக்கு
பூசைபுனஸ்காரம் புசிப்புமேதானுமில்லை
பாத்துமெள்ளவீரனுமே பதறியேகோபங்கொண்[டு]
இப்படிக்குத்தானிருந்தால் ஏர்க்காதுகலியுகத்தி[ல்]
என்றுநினைந்து எழுந்திருந்து அங்நேரம்
மீனாட்சிசந்நிதிபோய் விதியுடனேதெண்டனி[ட்டு]
என்தாயேமீனாட்சி எனக்குபுத்திசொன்னபடி
பட்டணத்திலுள்ளோரு பராமரிப்பதில்லையென்னை
இதுபார்த்துநீயிருந்தால் என்வயிறுபசியாதோ
ஆகலால்பட்டணத்தில் அமர்ந்தமனிதர்களை
கொள்ளைகொள்ளயெனக்குத் கூறுவையேயாணைக்கால்
கொன்றுதின்றுபசியாறிக் கோயிலிக்குள்வரும்போது
காவடியுந்தோனேந்திக் கம்பத்தடிவருவேனம்மா
என்றுதான்சொல்ல ஈஸ்வரியுந்தான்கேட்டு
கம்பத்தடிவீரா காரியத்தைச்சொல்லுகிறேன்
துணிவுகூறும்வீரா துள்ளாதேயிந்நேரம்
திருமலைநாய்க்கர்தம் செம்பொன்மணிமாளிகையில்

உள்ளே நுழைந்து உபாயுமொன்றுசெய்வாய்நீ
அவ்விடத்திலுள்ளவரை அதட்டிமிகச்சொற்பனத்தை
...ண்ணிவந்துபூசை பார்க்குடனேவாங்குமென்றுள்
...யேமீனாட்சி யிதுபோதுமென்றுசொல்லி
...ர்தன் சொம்பொன்மணிமாளிகையில்
என்றா...
திருமலைநாயக்க... ...டிதொடைதட்டி
ஆக்கிரமித்துப்போய... ...ம ... ...வேளையிலே
நஞ்சுதின்றுநஞ்சருக்...
பட்டணத்திலுள்ள பாரமுனிகளெல்லாம்
வண்...த்துரைவீரன் வருகின்றவழிதனிலே
...ரவரப்பயந்து எல்லோருந்தாமணிப்பார்
...ரண்மனையில் மதிலேறிவீரனும்போய்
...ஞ்சக்கூடத்தில் தனித்துசயனஞ்செய்யும்
...யக்கர்தனைச் செவ்வையாய்தான்பார்த்துத்
தோட்டபோலுருக்காட்டி சொர்பனஞ்சாதித்தான்
வேர்த்துவிரிவிரித்து விரித்துமெள்ளத்தான்பார்த்து
பதறியெழுந்திருந்து பைங்கிளியைத்தானெழுப்பி
காணாதசொற்பனந்தான் கண்டுபயந்தேனடி
என்றுசொல்லக்கேட்டு இயற்கையுள்ளபெண்ணரசி
எதுநடந்தாலும் ஈஸ்வரியாள்மீனாட்சி
பொற்பாதந்துணையொழியப் புகலுவதற்கேதுமில்லை
மன்னவர்க்குத்தேறுதலை மங்கையருந்தானுரைத்தாள்
சொல்லுகின்றவார்த்தையெல்லாந் துரைவீரன்கேட்டி
ருந்து, ஆகட்டுமென்று அரண்மனையைவிட்டுமெள்ள
கோட்டைத்தலைவாசல் குதிரைலாயம்புகுந்து

பஞ்சகலியாணிப் பட்டத்துக்குதிரையையும்
அறுத்தானொருநொடியில் ஆகாரங்கொண்டான்காண்
மாட்டுமங்கையிற்புகுந்து மகாபூசைகொண்டான்காண்
உக்கிரமுள்ளசேவகர்கள் ஒருநூறுதலையாரி
படுத்திருக்குஞ்சாவடியில் பாங்குடனேபோய்புகுந்து
சுழற்றியெறிந்தான்காண் சுற்று... திற்கப்பாலே
ஆனைகட்டும்லாயத்திலே ... அஞ்சாமல்வீரன்போய்
...டியிட்டுவீரன் ...
... மதயானையையடித்து
கன்னிகைப்பெண்கள் கண்ணுறங்கும்வேளையிலே
கன்னியர்களருகில்வந்து காளைமுத்துவீரனுந்தான்
செய்தசிலுக்குத் திடுக்கென்றுசத்தமிட
அபயமென்றசத்தம் அண்டமெலாந்தானதிர
காரணனுந்தென்மதுரை கம்பத்தடியில்வந்தான்
அன்றிரவுசென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
கச்சிதிருமலைநாய்க்கன் காலையெழுந்திருந்து
கால்கைகள்சுத்திசெய்து கனத்தபணிபூண்டு
கட்டியங்கள்கூறக் கவரிதனைவீச
நாகசுரமேளம் நாட்டியங்களாடிவர
மந்திரிகள்சேனை மகிழ்மன்னர்கூட்டமுடன்
ஆசாரவாசல்விட்டு அரண்மனையுந்தான்கடந்து
சொக்கரதுசந்நிதிக்கு துருசாகவோடிவந்து
அங்கயற்கண்மீனாட்சி யம்மனதுசந்நிதியில்
மீனாட்சிமுன்பாக வேந்தன்விரைவில்வந்து
முக்கால்வலம்வந்து மூவிருக்கால்தெண்டனிட்டு

எந்தாயேமீனாட்சி ஈஸ்வரியேயிப்போது
காணுதசொப்பனங்கள் கண்டவிதங்களென்ன
அதிசயங்கள்வந்தவகை அடியேனறிவதற்கு
வழியாயுரைக்கவேணும் வாய்மையுள்ளஈஸ்வரியே
பார்வேந்தனப்போது பாதத்தில்தான்விழுந்தான்
வாழ்மதுரைசொக்கரும் மதுரைமீனாட்சியரும்
அப்பாமகனே அதிசயங்களவந்தவகை
காரணமாய்வந்தவகைக் கம்பத்தடிவீரன்
பட்டபாடெல்லாம் பாரோர்நினைக்கவில்லை
...ரந்திபசிமெத்த பொல்லாதவீரனுக்கு
...ானதினாலே ஓடிவந்தானுன்மனைக்கு
...தறையொழிய வேறொன்றுந்தானுமில்லை
...மெங்கும் பலதெருவார்பூசைசெய்ய
கம்பத்தடியில்வந்து காணிக்கைதானும்வைத்து
சந்திக்குச்சந்து தனிபூசைதானுமிட்டு
இந்தப்படிக்கு இதமுடனேகைதொழுதால்
வீரன்குறைதீர்ந்து வெகுசாய்மனங்களிப்பான்
என்றுசொல்லியீஸ்வரியும் இதமுடனேவாக்குரைக்க
திருமலைநாய்க்கர் சீக்கிரத்தில்தானெழுந்து
கம்பத்தடியில்வந்து காலைமுதல்வீரனுக்கு
ஐந்நூறுபொன்கொண்டு அபிஷேகம்பண்ணிவைத்து
மண்டபமும்கட்டிவைத்து மகாபூசையுங்கொடுத்து
தேங்காயுடைத்து தீபதூபங்கொடுத்து
இளநீருஞ்செங்கரும்பும் இதமானபால்பழமும்

வணமட்டும்பூசிவர
சந்து தனிப்பூசைதான்போட
லோரறிய எங்கும்பறைய
ரையிலுள்ளோர்கள் வகையுடனேதானுமப்போ
க்குவீதி வேணபடிபூசையிட்டார்
னிடத்திற்கு வேந்தனும்வந்தேதொழுது
படிமுமிட்டு முன்பூசைபோடுகிறேன்
வினைகளெல்லாம் மாளவேசெய்யுமையா
றுசொல்லிநாய்க்கருமே இதமாகக்கைதொழுதார்
படியாக இருக்குமந்தவேளையிலே
ட்டைக்குறிக்காரன் குமாரமுத்துநாய்க்கன்மே
வேசம்வந்து அவன்பேரில்கொக்கரித்து
வாய்மலர்ந்து செப்பலுற்றாரந்நேரம்
ணைநினைக்காம லிதுவகையிலேயிருந்தீர்
ந்திபசியாறிப் பூரித்தேனிப்போது
பெயரைச்சொல்லி யீய்ந்தாள்விபூதிதனை
தணிநோயும் மானிடர்த்தீருமப்போ
றுதெளிவர யிதமாகத்தான்சொல்லி
னிறந்தசேனைமுதல் முழுதுமெழுந்திருக்கச்
துமலையேறிச் சென்றுதேயாவேசம்
மலைநாய்க்கர் திருநீறுதான்கொண்டு
மனைக்குச்சென்று ஆரிழைக்குத்தான்கொடுத்து
பிள்ளைபிறந்தால் ஆணிமுத்துவீரனென்று
ணும்பேரென்று இயம்பினார்நாய்க்கருமே

கும்பிட்டுவாங்கி குயில்மொழியாள்தான
மூன்றுமாதஞ்சென்று முருக்கம்பூமேனியரும
புத்திரனுமுண்டானாள் பொற்கொடியுமப்போது
பத்தானமாதத்தில் பாலனையும்பெற்றெடுத்தாள்
பிள்ளைக்குவீரனது பேர்வைத்து அந்நேரம்
ஐந்நூறுவண்டியில் ஆனதொருசர்க்கரையும்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
ஒன்பதுகாதவழி யூர்தோருஞ்சர்க்கரைகள்
வீதிக்குவீதி வேணமட்டும்வழங்கிவர
வேதியர்க்கெல்லா வெகுவாய்த்தானெடுத்து
...க்கருடன்மீனாட்சி துயிங்குமதிற்கோயில்சென்று
...கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
...பத்துபொன்னெடுத்து அபிஷேகம்பண்ணிவைத்
அரண்மனைக்குவந்து அரசன்திருமலைநாய்க்கன்
வீரனுக்குப்பூசை விதமுடனேதான்செய்து
பூதலதிலுள்ளவர்கள் பூசைகொடுப்பார்கள்
உன்காவலுன்னடிமை உண்மையுள்ளவீரையனே
தற்காத்துக்கொண்டு தயவாகக்காருமையா
ஐயாவேவீரனே அனைவரையுங்காத்திடுவாய்
அவரவர்கள்பங்கில். அனுதினமுநீயிருந்து
என்னையுங்காத்து இரட்சிக்கவேணுமையா
என்றுதிருமலைநாய்க்கன் இன்பமுடனேதொழுது
வாழ்மதுரைசொக்கர் மதுரைமீனாட்சியம்மாள்